பிரசித்தபத்திரிகை.

புதுவையில்ச்சிற்பதிப்பித்துவெளிப்படுத்தின புஸ்தகங்களாவன:

	புதுவையில்.		மற்ற விடங்களில்.		
	ரூ.	அ.	ரூ.	அ.	ப.
ஞானுயிர்த்தடாகம். சித்திரகட்டிடம்.	௨		௨	௨	
ஷை தங்கவிரேக்குக்கட்டிடம்.	௨	௮	௨	௰	
ஷை தோற்கட்டிடம்.	௧	௮	௧	௰	
வேதவிளக்கம். —	௧	௮	௧	௰	
ஞானுயிர்தம. —		௰		௰௧	
வேதப்புரட்டலுநீக்குஞ்சஞ்சீவி. —	௧		௧	௧	
சத்தியவேதப்பரிட்சை. —	௧	௪	௧	௬	
தேவமாதாவின்வணக்கமாதம். —		௰௧		௰௨	
Grammatica Latino-Tamulica. —	௨		௨	௨	
Dictionarium Latino-Gallico-Tamulicum. —	௬		௬	௮	
நிலத்தின்-பிராஞ்சு-தமிழ்-அகராதி. —	௬		௬	௮	
அசாரம். —		௮		௯	
ஷை அரைக்கட்டிடம்.		௬		௭	
ஞானமுயற்சி. —		௮		௯	
ஞானஉணர்த்துதல். —		௪		௪	௬
தன்ருப்திலே —		௮		௯	
சிலுவைப்பாதை. —		௮		௯	
அர்ச். இஞ்ஞாசியார்தியானங்கள். —		௰௨		௰௫	
அர்ச்.-சவேரியார்சரித்திரம். —		௭		௮	
தெய்வப்பரிட்சை. —		௪		௪	௬
பிராஞ்சிலக்கணநூற்சுருக்கம். —		௰௨		௰௫	
இலக்கணச்சுருக்கம். —		௮		௯	
இலக்கணநூலாதாரம். —		௪		௪	௯
இலத்தீனிலக்கணநூற்சுருக்கம். —	௧		௧	௧	
வாலர்பொக்கிஷம். —		௪		௪	௯
வாலர்துணை. —		௫		௫	௪
வேதியரொழுக்கம்-ஞானக்கண்ணாடி. —		௰௨		௰௫	
சாதாரணம். கடுதாசிக்கட்டிடம்.		௧		௧	
தேம்பாவணி முதற்காண்டம். —	௨		௨	௨	
ஷை இரண்டாங்காண்டம். —	௧	௮	௧	௰	
ஷை முதனான்குபடலங்கள். —		௮	௯		
TEMBAVANI. Première partie, avec notice. —	௨	௪	௨	௩	
Notice sur la poésie Tamoule, le Rév. P. Beschi et le Tembâvani. —		௪		௪	௬
வேதப்புரட்டலமறுத்தல். —		௨		௨	௫
பிரிவினைவிளக்கம். —		௨		௨	௫
நெடுநாட்பஞ்சாங்கம். —		௨		௨	௫
சத்தியவேதாற்புதங்களின்சுருக்கம். —		௧		௧	

பிரசித்தபத்திரிகை.

	புதுவையில். ரூ.	புதுவையில். அ.	மற்றவிடங்களில். ரூ.	மற்றவிடங்களில். அ.	மற்றவிடங்களில். ப.
சத்தியசபைப்பதிட்டை.	—	க		க	
அத்தேரினத்தியல்பு.	—	க		க	
ஆதிச்சுவடி.	—	உ		உ	௩
ஆதிச்சுவடிபரமார்த்தகுருவின்கதை.	—	௪		௪	௬
பரமார்த்தகுருவின்கதை.	—	உ		உ	௩
இலத்தினிலுந்தமிழிலும்ஷெகதை.	—	௪		௪	௬
பிராஞ்சு நெடுங்கணக்கு...	—	உ		உ	௩
பிராஞ்சு-தமிழ்...எளிதானபாடங்கள்.	—	௮		௯	
Leçons faciles de Français et de Tamoul.	—	௮		௯	
Verbes irréguliers.	—	௪		௪	௬
பாலர்சுவடி.	—	க		க	
அஞ்ஞானதூஷணமறுத்தல்.	—	உ		உ	௩
அதிஷ்ரோஷ்டசபை ஒழுங்கு.	—	௭			௬
பூசையுதவிமந்திரங்கள்.	—	க		க	

☞ விவரம். இப்புஸ்தகங்களைப்புதுவையினின்று மற்றவூர்களுக்குக்கொண்டுபோகிற செலவையுஞ் சுங்கத்தையும்பற்றிப் புதுவைக்கும் மற்றவிடங்களுக்கும் வெவ்வேறுவிலைகுறிக்கப்பட்டது.

தேம்பாவணி.

அநாதி.

தேம்பாவணி

இரண்டாங்காண்டம்.

வீரமாமுனிவர்

அருளிச்செய்த

இக்காப்பியம்

அவரதுகையெழுத்துப்பிரதிக்கொப்பப்
புதுவையில் எழுந்தருளியிருக்கும்
மகாகனம்பொருந்தியஆண்டவரும்
அப்போஸ்தொலிக்குவிக்காரியுமாகிய
கிளெமென்சுபொனாந்
துரிசிப்பாவென்னும்
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்கள் அநுமதியில்
உரோமாபுரியினின்று வந்த
உத்தாரத்தின்படியே



௲௮௱௫௰௨ம். ௵
புதுவையிற் சன்மவிராக்கினிமாதாகோயிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

கடவுள் - துணை.

சந்தங்களின்

அட்டவணை.

௰௩-வது. பைதிரநீங்குபடலம்.

பக்கம்,	விருத்தம்.	
௧	௧	காய், காய், மா, மா, காய்.
௪	௮	விளம், விளம், மா, கூவிளம்.
௭	௨௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௯	௨௬	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௰௪-வது. இளவன்மாட்சிப்படலம்.

௰௪	௧	விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.
௰௭	௰௨	மா, கூவிளம், மா, கூவிளம். விளங்கனி, மா, கூவிளம். விளங்கனி, விளங்கனி.
௨௰	௰௯	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௬	௩௮	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௩௧	௪௮	மாங்கனி, மாங்கனி, மாங்கனி, புளிமா.
௩௬	௬௪	மா, மா, மா, மா, மா, மா.
௪௰	௭௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௪௪	௮௮	வெண்பாப்போல வந்தவிருத்தங்கள். (இடைமடக்கு.)
௪௫	௯௧	காய், காய், மா, தேமா, காய்.

*௬ சந்தங்களினட்டவணை.

பக்கம், விருத்தம்.

௪௮ ௯௮ விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௫௨ ௱௰ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௫௬ ௱௨௫ கருவிளம், கருவிளம், கருவிளம், கருவிள
ம். † (இடைமடக்கு.)

௫௭ ௱௨௬ விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௫௮ ௱௨௯ மாங்காய், தேமா, மாங்காய், தேமா, மா
ங்காய், தேமா, புளிமா.

௰௫-வது. சோசுவன்வெற்றிப்படலம்.

௬௫ ௧ காய், காய், காய், காய்.

௬௭ ௮ மா, மா, காய், மா, மா, காய்.

௭௨ ௰௧ மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.
மா, புளிமா, புளிமா, புளிமா.

௭௮ ௪௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௮௪ ௫௭ விளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.
கூவிளங்காய், புளிமா, புளிமா, புளிமா.

௯௰ ௭௫ கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், க
ருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம்.
தன்தன், தன்தன், தன்ன், தான்ன், தனதன்,
தன்தன், தன்ன், தான்ன.

௯௫ ௮௨ விளம், மா, தேமா விளம், மா, தேமா.

௯௮ ௯௰ மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், மா,
கூவிளங்காய், விளம்.

௱௫ ௯௯ விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், விள
ம், கூவிளங்காய்.

௱௬ ௱௯ கருவிளம், புளிமா, தேமா, கருவிளம், கரு
விளம், புளிமா, தேமா, கருவிளம்.
தன்தன், தன்த்த, தான, தன்தன், தன்தன்,
தன்த்த, தான், தன்தன்.

---

† அத்தத்தவிருத்தத்தைக் கடையடியி னுலாஞ்சீர் புளிமாவென்றறி

பக்கம், விருத்தம்.

௱௧ ௱௰௪
புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், புளிமா, புளிமா.
தன்தான், தன்தன்ன், தன்தான், தன்தன்ன், தன்தான், தன்ன், தன்ற.
புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்கனி.
தன்தான், தன்தன்ன், தன்தான், தன்தன்ன், தன்தான், தன்தத்தந்தன.

௱௰௨ ௱௰௧
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், தேமா
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், தேமா, புளிமாங்காய்

௱௰௮ ௱௩௧
விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௱௨௨ ௱௪௨ மாங்கனி, புளிமாங்கனி, புளிமாங்கனி, புளிமா.

௱௨௫ ௱௫௧
தன்தத்தந்தன், தன்தத்தந்தன், தன்தத்தந்தன், தன்தன.
கருவிளங்கனி, கருவிளங்கனி, கருவிளங்கனி, கருவிளம்.
புளிமா, கூவிளம், புளிமா, கூவிளம், புளிமா, கூவிளம், கருவிளம்.

௱௨௮ ௱௫௮
புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம்
கருவிளங்கனி, கருவிளம், கருவிளம், கருவிளங்கனி, கருவிளம், கருவிளம்.
தன்தத்தந்தன், தன்தன், தன்தன், தன்தத்தந்தன், தன்தன், தன்தன்.

௱௩௩ ௱௬௮ விளம், கருவிளம், விளம், கருவிளம்.

௱௩௭ ௱௭௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

*௮ **சந்தங்களினட்டவணை.**

பக்கம், விருத்தம்.

௱௩௮ ௱௮௩ கருவிளம், கருவிளங்காய், கருவிளம், கரு
விளங்காய்.
தன்தன், தன்தன்ன, தன்தன், தன்தன்ன.

௱௪௰ ௱௮௬ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௰௬-வது. சேதையோன்வெற்றிப்படலம்.

௱௪௩ ௮ விளங்கனி, விளம், விளம், மா.
மா, கூவிளம், விளம், விளம், மா.

௱௪௭ ௰௭ மாங்கனி, கூவிளம், கூவிளம், தேமா, தேமா.
மாங்கனி, கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.
மாங்கனி, கூவிளங்காய், புளிமாங்காய், தே
மா.
மா, புளிமா, புளிமா, புளிமாங்காய், தேமா.

௱௪௯ ௨௫ விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௱௫௧ ௩௧ மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், மா,
கூவிளங்காய், விளம்.

௱௫௫ ௩௯ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௱௬௰ ௫௨ மா, காய், மா, மா, காய்.

௰௭-வது. காசைசேர்படலம்.

௱௬௪ ௧ விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௱௬௮ ௰௩ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௱௭௩ ௨௭ காய், காய், மா, மா, காய்.

௱௭௯ ௪௰ மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.
விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௰௮-வது. சீனயிமாமலைகாண்படலம்.

பக்கம்,		விருத்தம்.
௱௮௬	௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௮௭	௰௫	காய், காய், மா, மா, காய்.
௱௯௨	௨௬	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௯௫	௫௬	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௨௱	௬௫	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௰௯-வது. பாலைபுகுபடலம்.

௨௱௫	௧	விளம், புளிமாங்காய், விளம், புளிமாங்காய். விளங்கனி, தேமா, விளங்கனி, தேமா.
௨௱௭	௬	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௱௰௧	௰௮	வெண்பாப்போலவந்தவிருத்தம். (இடைமடக்கு.)
௨௱௰௨	௨௧	விளம், கருவிளம், கருவிளம், கருவிளம், மா, தேமா. விளம், கருவிளம், கருவிளம், கருவிளம், விளங்காய்.
௨௱௰௬	௨௬	மா, மா, காய், மா, மா, காய்.
௨௱௰௯	௫௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.

௨௰-வது. சித்திரகூடப்படலம்.

௨௱௨௫	௰௧	மா, காய், மா, மா, காய்.
௨௱௨௮	௰௮	காய், காய், மா, தேமா, காய்.
௨௱௫௫	௫௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௱௬௨	௫௫	மா, காய்; காய், காய்.
௨௱௬௬	௬௬	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

பக்கம், விருத்தம்.

௨௱௫௪ ௮௨ { மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.
விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௨௱௫௯ ௯௭ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௱௬௯ ௱௨௰ { விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௨௧-வது. நீர்வரமடைந்தபடலம்.

௨௱௭௪ ௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௱௭௯ ௰௪ { மா, கூவிளங்காய், கூவிளம், தேமா.
விளங்காய், புளிமா, புளிமாங்காய்.

௨௱௮௨ ௨௪ மாங்கனி, புளிமாங்கனி, புளிமாங்கனி, புளிமா.

௨௱௮௬ ௩௫ { மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.
விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௨௨-வது. எசித்துசேர்படலம்.

௨௮௮ ௧ மா, கூவிளங்காய், கூவிளம், தேமா, மா, கூவிளங்காய், கூவிளம், தேமா.

௨௮௯ ௪ { மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.
மா, புளிமா, புளிமா, புளிமா.

௨௯௨ ௰௨ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௯௭ ௨௪ { விளம், விளம், மா, கூவிளம்.
விளம், விளம், விளங்கனி.

௨௫-வது. குணுங்குமர்திரப்படலம்.

௩௱௧ ௧ மா, மா, காய், மா, மா, காய்.

௩௱௫ ௰ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பத்யம,	விருத்தம்.
௲௭௰	௨௨ தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.
௲௭௰௲	௲௰ { மா, கூவிளம், கூவிளம், கூவிளம். / விளங்கனி, கூவிளம், கூவிளம். }
௲௭௰௭	௪௲ விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.
௲௭௨௧	௫௪ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௲௭௨௭	௭௰ காய், காய், காய், காய்.
௲௭௲௧	௮௰ { மா, கூவிளம், விளம், விளம், மா. / விளங்கனி, விளம், விளம், மா. }
௲௭௲௮	௲௮ விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௲௭௪௬	௭௰௲ { விளம், விளம், மா, கூவிளம். / விளம், விளம், விளங்கனி. }

௨௪-வது. சோகுதோர்வைப்படலம்.

௲௭௫௰	௧ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௲௭௫௪	௰௨ { விளம், விளம், மா, கூவிளம். / விளம், விளம், விளங்கனி. }
௲௭௫௭	௨௨ விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௲௭௫௮	௨௪ மாங்கனி, கூவிளம், கூவிளங்காய், மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.
௲௭௬௧	௲௧ { கருவிளம், புளிமா, தேமா, கருவிளம், கருவிளம், புளிமா, தேமா, கருவிளம். / தன்தன், தன்த்த, தான, தன்தன், தன்தன், தன்த்த், தான், தன்தன். / கருவிளங்காய், தேமா, தேமா, கருவிளம், கருவிளங்காய், தேமா, தேமா, கருவிளம். }
௲௭௬௪	௲௮ { புளிமா, கருவிளம், புளிமா, கருவிளம், புளிமா, கருவிளம், கருவிளம். / தன்ன், தன்தன், தன்ன், தன்தன், தன்ன், தன்தன், தன்தன. }

பக்கம்,	விருத்தம்.	
௲௱௪௰	௪௪	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௲௱௭௧	௫௪	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

விவரம். இவ்வட்டவணையிற் குறித்திருக்கிற குறிப்புகளு மன்றி யிக்காப்பியத்தில் மற்றவையுமுண்டு. உதாரணம்: சோகவன்வெற்றிப்படலம் - ௧௧-ம். விருத்தம்.

தனதனத்தன், தனதனத்தன், தனதனத்தன், தனதன,

தேம்பாவணி.

பதின்மூன்றாவது.

பைதிரநீங்குபடலம்.

வேறு.

குளிமுகத்தினிலையாகிப்பைம்பூமேய்ந்த கனலொப்ப
சுளிமுகத்தினுற்றதுயருள்ளம்வாட்டித் துகைத்தன்ணூர் [ச்
வளிமுகத்தின்விளக்கன்னமயங்கியேங்க வந்தவையான்
கிளிமுகத்தின்கிளவியொடுவிரும்பியிங்கண் கிளக்குகிற்பேன்.

உரை.—முற்சொன்னதெல்லா மகிழ்ச்சியோடுநடந்தபின்பு பைம்பூந்தாதைச் செந்தீயுண்டாற்போல வெகுண்டுவந்ததுயர் மரியுஞ்சூசையுமென் றிருவருள்ளத்தைவாட்டிவருந்தும்படி யவர் காற்றின்முன்வைத்தவிளக்குப்போல மயங்கியேங்கும்படி யங்கேயானசெய்தியை நானிங்கேமடக்கிளிச்சொல்லாகவிரும்பிச் சொல்லுவேனென்க. (க)

பூந்தாமக்கொம்பனையாள்பூத்தபைம்பூ முகைமுகத்திற்
றேந்தாமத்திருமகனேர்ந்தின்னுமெண்ணாள் செலவன்ணூர்
தேந்தாமக்கடிநகர்கண்டங்கணுள்ளி நாடோறும்பொற்
காந்தாமக்கோயில்விழாவணியின்வெஃகிக் கனிசேர்வார்.

உரை.—பூங்கொம்போடொத்தாள் பூத்தபூவரும்பினொத்தமுகத்தையுடைய வாசமாலையாகிய திருக்குமாரனைநேர்ந்த பின் பின்னமெட்டுநாளுமங்கேசெல்லும்படி மரியுஞ்சூசை

யுந் தாமே யந்நகரிடத்துத் தரித்தற் காசைவைத்திருந்து நா
ட்டோறும் பொற்கோயிலுக்குத் திருநாளாக விரும்பிப்போ
வாரென்க. (௨)

நெஞ்சுபதிகொண்டவருளெஞ்சாநீரார் நிறைந்தைந்
நாண்
மஞ்சுபதிகொண்டமலையொத்தபைம்பூ மணிப்புகைசூழ்
விஞ்சுபதிகொண்டமரர்வைகுங்கோயில் மேவியபின்
னஞ்சுபதிகொண்டவுரைத்தூதுவாறேனவின்றடைந்தான்.

உரை.—தன்பதியென்றது தயையேகுடியாய்நிற்கு நெஞ்
சினையுடைய நீராராகியமரியுஞ்சூசையுஞ் சொன்னபடிமே
கங்கள்பதியாய்நிற்குமலைபோல வகின்முதலியநற்புகைகள்
மண்டிச்சூழ வானவர்குடியாய்நிற்குமக்கோயிலுக் கைந்து
நாளும்போனபின்பு நஞ்சினைநிறைந்தவுரைகளைச்சொல்வி
யொருவானவன் றூதாகவந்தானென்க. (௩)

கான்வயிற்றார்பூங்கொடியோ னுறங்குங்காலை கதிர்தும்பி
மீன்வயிற்றுருக்காட்டிவிண்ணோனெய்தி விரைக்கொடியோ
பூண்வயிற்றார்வேல்வேந்தனிளவற்கோற னுள்ளினனீ
தேன்வயிற்றாரிப்பதிநீத்தெசித்துநாட்டைச்செல்கவென்றான்.

உரை.—வாசனைநிறைந்த பூங்கொடியையுயர்த்தசூசை யு
றங்கினபொழுது கதிரைவிட்டு மீனுருவாகவந்தவானவன்
சொல்லுவான்: வாசபூங்கொடியேந்தியவனே பூணிறைந்த
கொடியவேலையுடைய வேந்தனாகியவேரோதன் றேவகுழந்
தையைக் கொல்லும்படிநினைவெடுத்தானாதலா னீயுடனே
தேனைப்பொழிந்த வித்தேசத்தைவிட் டெசித்துநாட்டிற்கு
ப்போவாயாக வென்றானென்க. (௪)

அழற்குளித்தபைந்தாதோகண்பாய்வேலோ வகல்வாய்
ப்புட்
புழற்குளித்தசெந்தீயோவருமோகூற்றோ பொருவின்றி
நிழற்குளித்தவுருவானோன்கொடுஞ்சொற்கேட்டு நெடுங்க
டனீர்ச் [த்தான்.
சுழற்குளித்தமனஞ்சோர்ந்துவளனப்பணியைத் தொழுதுளை

உரை. — பைம்பூந்தாது தீந்துகெடும்படி குளித்ததீ யோ கண்ணிலேபாய்ந்தவெறிவேலோ வகன்றபுண்வாயிலே குளித்தசெந்தீயோ விடியோ கூற்றமோ வினைவெல்லாநிகரா தபடி விளங்கியவடிவோடுவந்த வானவன் சொன்னசொல் கொடியதாய்த்தோன்றி யதைக்கேட்டகுசைநெடுங்கடலிலே சுழலப்பட்டமிழ்ந்தித் தன்மனஞ்சோரும்படிநொந்து பி ன்னையு மத்தேவபணியைவணங்கினனென்க. (௫)

மலிநிழற்பட்டலர்மலரின்றொய்யஞ்சேயின் மழவினை யும் [னையா
பொலிநிழற்பட்டலர்பூங்கொம்பொத்தாளொய்வும் புனைவி
லலிநிழற்பட்டெரிபெசித்தார்நாட்டின்சேனுமாய்ந்தவளன்
புலிநிழற்பட்டேங்கியமான்போலவேங்கிப் புலம்பினளால்.

உரை. — வளனுகியகுசை யப்பணியைக்கேட்டவளவிலே மிக்கநிழலிலே மலர்ந்த பூவின்றன்மைத்தாகிய திருக்குமார னுடையவிளமையு நிழலிலேமலர்ந்த பூங்கொம்பனையதாயி னொய்மையும் பாவவினையா லழற்பட்டெரியு மெசித்தார் நாட்டின்றாமு மென்னு மிவையெல்லாவற்றையுமாராய்ந் ததனாற் புலியினிழற்பட்டவளவிலேமான்குழைந் தேங்கினாற் போலத் தானுமேங்கிப் புலம்பாநின்றாளென்க. (௬)

அறிவின்மையுறவின்மையறத்தினின்மையங்கட்செள்
ளெறியின்மைநெறிதுலைக்குமுறுதியின்மை நெறிதன்னிற்
பறியின்மைசார்பின்மைதன்பாவின்மை பரிசல்லாற் [ன்.
பிறிவின்மையோர்ந்துளைந்தானுளைந்துமீண்டே பிரிவுற்று

உரை. — மீளவுமந்நாட்டிற் றம்மையறிந்தாருமின்றி யுற வோருமின்றி யறத்தினைவிரும்பினருமின்றி யங்கேபோம்வ ழியறிதலுமின்றி வழிதுலையும்படி யுதவியுமின்றி வழியினா ருமின்றிச் சார்புமின்றித் தனக்குத் தரித்திரமல்லது வேறொ ன்றுமின்றி யாயவித்தன்மையெல்லாமோர்ந்து மிகவும்வரு ந்தினன், வருந்தினுந்தாமதமின்றித் தேவகட்டளையின்படி யுடனேபோதலுற்றனென்க. (௭)

வேறு.

வேரியந்தாரிணான் விரைந்தெழுந்தனன்
மாரியந்தாரையின் வளர்கண்டாரைநீர்
நேரியந்துணைவியை நேடிநாயகன்
றேரியக்கேவிய பணியைச்செப்பினான்.

உரை. — வாசபூங்கொடியோனாகியகுசை விரைந்தெழுந்துமாரியின்றாரையாகக் கண்ணீரைவிட்டழுது தன்னற்றுணைவியைத்தேடி யாண்டவன்றெளிந்து செய்தகட்டளை யின்னதென்று சொன்னானென்க. (௮)

செய்யிதட்டாமரை பழித்தசீறடித்
துய்யிதட்டுப்பவிழ் சுருதிவாயினா
ளையிதட்டாரினா னறையத்தீமுனர்
நொய்யிதட்டாதென நொந்துவாடினாள்.

உரை. — சிவந்ததாமரையைப்பழித்த சீறடியையுந் தூய பவளநிறத்தலர்ந்து வேதத்தைவிரித்துரைக்கும் வாயினையுமுடையமரியென்பவ ளழகிய பூங்கொடியோன்குசை யச்செய்தியைச்சொன்னவளவிலே தானெய்யபூந்தாது தீயிலேவாடினாற்போல வாடிநொந்தாளென்க. (௯)

எதிரிலான்பகையிலா னிணையெலாமிலா
னுதிரிலாமதுகையா னுணர்வின்மேனின்றான்
விதிரிலாவிதியிதென் றிறைஞ்சிவேண்டினர்
பிதிரிலாத்திருவுளம் பேணித்தேரினார்.

உரை. — இருவரும்வருந்தினபின்பு தனக்கெதிரும்பகையுநிகருமொன்றுமின்றித்தடுக்கப்படாதவல்லமையையுடையனாய் மனிதருணருமெல்லையைக்கடந்தகடவுள்செய்த தப்பாதகட்டளையிதென்று வணங்கிவேண்டிச் சிதைவில்லாத திருவுளத்தைப்பேணித் தெளிந்தாரென்க. (௰)

தேரியமனத்தவர் தேறிநாயக
னாரியமுகத்துறை யங்கணேகினார்

நீரியமுகிலெனப் படத்தைநீக்கலாற்
சூரியனவியெனத் தோன்றல்தோன்றினான்.

உரை.—இத்தன்மைத்துத் தெளிந்தமனத்திற்றேறித் தேவகுமார னழகியமுகத்தோடிருந்தவிடத்துச்சேர்ந்தார், சேர்ந்தபின்பு செல்வமணிமேகத்தின்றன்மையா லவன்மேற்போட்டிருந்தபடத்தை நீக்கினதினான் மேகநீங்கிச் சூரியன்றோன்றினாற்போலத் தேவகுழந்தைதோன்றினானென்க. (௰௧)

முப்பொழுதொருபொழு தாகமுற்றுணர்ந்
தெப்பொழுதனைத்துமெய் பொருளியாவினு
மெய்ப்பொருடெளிந்தவிர் காட்சிமேன்மையா
னப்பொழுதுறங்கினா னன்னப்பார்ப்பனான்.

உரை.—இறப்பெதிர் நிகழென்னுமுக்காலமு நிகழ்காலமாக வெல்லாவற்றையு மிறந்தபொருளும் வரும்பொருளு மன்றுள்ளபொருளைக்கண்டாற்போல வெப்பொழுதுமறிந்து அறிந்தபொருள்களில் மெய்ப்பொருளை மயக்கமின்றித் தெளித்துவிளங்கியகாட்சியையுடைய நாதனாகிய வத்திருக்குமார னவர்வந்தப்பொழுதே யன்னத்தின்குஞ்சுபோலத் துயிலாநின்றானென்க. (௰௨)

கலைமுகந்தருந்திய புலமைக்காட்சியோ
யலைமுகத்தருந்திய வருளென் றன்பணி
கொலைமுகந்தருத்துயர் கொண்டுஞ்செய்வலென்
றலைமுகத்தருந்தழற் குருகியேந்தினாள்.

உரை.—கலையெல்லாங்கடந்த காட்சியையுடையமகனே! கடலினும் பெரிதாயவருளின்றன்மை யிதென்றெண்ணிக் கொல்லுந்தன்மையுள்ள துயரைக்கொண்டாயினு முன்கட்டளையைத் திருத்துவேனென்றுசொல்லி புலியின்முகத்துட் கொண்ட துன்பத்தழலி லுருகியநெஞ்சினளாய்த் தாயாகி யமரியென்பவள் மகனையெடுத்துக்கையிலேந்தினாளென்க. (௰௩)

ஏர்வளரடிபணிந் திளவலேந்தவி
னீர்வளர்குவளைதேன் றுளித்தனோரவன்

சீர்வளர்விழிமலர் திறந்துமுத்தகச்
சூர்வளர்மனத்தவர் துகைத்துளோங்கினார்.

உரை.—அழகியபாதமலரைவணங்கித் தாய்திருக்குமார னையெடுத்தேந்தியபோது நீரில்வளருங்குவளை தேனைத்து ளித்தாற்போல வவனுந் தன் றிருவிழிமலரைத்திறந்து முத் தாகக்கண்ணீரைவிட்டழுதா னதைக்கண்ட மரியுஞ்சூசையு மிகுந்ததுக்கத்தோடுவருந்தியேங்கினாரென்க. (௰௪)

கதிர்தருங்காதலன் கன்னித்தாயுரத்
தெதிர்தரும்விழிகலந் தினிதிற்சாய்ந்தனன்
முதிர்தருமயிர்துக முறுவற்கொட்டலாற்
பொதிர்தருமின்பமுற் றிருவர்பொங்கினார்.

உரை.—ஒளியைச்செய்யாநின்ற திருக்குமார னவர்கொ ண்டதுயரத்தைக்கண்டு தன்கன்னியாகியதாயின்மார்பிலேத ன்கண்ணு மவள்கண்ணுமெதிர்பட்டுக் கலந்தபார்வையாம் படி சாய்ந்தன்று யவர்க் கமிர்தத்தையூட்டின தன்மைபோல வொருபுன்னகையைக்காட்டினான், காட்டினவளவிலேயிரு வர்மிகக்களிகூர்ந் தின்பத்தினாற்பொங்கினாரென்க. (௰௫)

பொங்கியவருத்தியாற் பொலிந்தகன்னியுந்
தங்கியகொடிபொடுட் டளிர்த்தசூசையும்
பங்கயமலரடி பணிந்துபாலனை
யங்கிவரகனுதற் காசிகேட்டனர்.

உரை —அங்ஙனம் பொங்கியவாசையோடுகன்னித்தாயு ந் தானுயர்த்தபூங்கொடியைப்போல வுள்ளேமலர்ந்து தளிர் த்தசூசையுந் தாமரைப்பாதத்தைவணங்கிப் போதற் காசீர்வா தத்தைத் திருக்குமாரனைக்கேட்டாரென்க. (௰௬)

மருந்தடக்கனிமுக மகிழ்ந்துநாயக
னருந்தடத்தவர்க்குநல் லருளோடாசியைத்
தருந்தடத்திவர்ந்திருட் புதைத்தசாமத்தாங்
கிருந்தடத்தேகுதற் கெழுந்துபோயினார்.

உரை.—அப்பொழுதுயிரைத்தருமருந்தினு மினியமுகத் தைக்காட்டி மகிழ்ந்ததாதனு மரியமாட்சிமையோடிருவருக் கருளைப்பொழிந்த வாசீர்வாதத்தைத்தந்தான், தந்தநன்மை யா லிவருயர்ந் திருண்டநடுச்சாமத்தில் நெடும்வழிநடப்பத ற்கெழுந்து போகத்துடங்கினரென்க. (௰௭)

இருச்சுடரோன்பட வினையாயிரங்
குருச்சுடர்மேனியைக் கொண்டவானவர்
திருச்சுடரோனெனச் சிறவற்றுளினை
பருச்சுடர்பாய்ந்துறப் பணிந்துதோன்றினார்.

உரை. — மூன் னருபியாய்நின்ற பதினாயிர வானவரத் தரவாயிலே சூரியன்வடிவுமறைப்பதற்குப் பெருங்கதிராவீ சியவுடலையெடுத்துக்காட்டித் திருச்சுடரோனாகிய வத்தேவ குமாரன் றிருப்பாதத்திற் சுடர்பாயும்படி விழுந்துவணங்கித் தோன்றினாரென்க. (௰௮)

எல்லியல்படச்சுட ரிரவிறேற்றினார்
பல்லியங்கடலொலி படமுழக்கினா
ரல்லியங்குழலினை யளவில்வாழ்த்தினார்
கல்லியம்பாத்தொடை கனியப்பாடினார்.

உரை.—அத்தன்மையராய்த் தோன்றினவானவர் பகலினு மவ்விராவிளங்கும்படி யொளியைத்தோற்றினார், பலவாச்சிய ங்களைக்கொண்டுகடலினுமுழங்கினார், ஆம்பலின்வடிவாகநின் ற திருக்குமாரனை யளவின்றிவாழ்த்தினார், மதுவினுமினியபா வின்றொடைகளைப் பாடினாரென்க. (௰௯)

வேறு.

வார்வளர்முரசுமாரா வரிவளர்வளையமுதா
தேர்வளருருளுஞ்செல்லா தெருவளரரவுநீந்தான்று
ஆர்வளரசைவுமில்லா வுறங்கியசாமத்தேகிச்
சீர்வளருயிர்போயவ்வூர் செத்துடம்பொத்ததன்றே.

உரை.—அவர்போனநடுச்சாமத்தி லெல்லாருமுறங்காநி ற்ப முரசுஞ்சங்குமுழங்காமற் றேர்கணடவாமற் றெருக்க

ளிலாட்புழுக்கந்தோன்றுமவ் வூரிலேபசையில்லாமலிருந்தத னாலந்நகர் தன்னுயிர்போய்ச் செத்த பிணத்தின்றன்மை போலநின்றதென்க. (௨௰)

நல்வினையுலந்தபோழ்தின் னலமெலாமகலும்போலக்
கொல்வினையறுப்பவந்த குணத்தொகையிறைவன்போக
வல்வினைமருளிற்பொங்கு மல்லவையுயிரைவாட்டப்
புல்வினைமல்கிச்சீலம் புரிநலம்போயிற்றன்றே.

உரை.—நல்வினையின்றி நன்மையில்லையென்றதுபோல வுயிரைக்கொல்லுந் தீவினையையறுக்கும்படி மனிதனாயவதரித்துவந்த நற்குணத்தொகையோனாகியகடவு ளவ்விடத்து நீங்கிப்போனதினா லறிவிருட்டுமயக்கத்தாற்பொங்கிவரும் பாவங்க ளுயிரைவாட்டும்படி புல்வினையாகியதீவினை யங்கேமி வியப்பெருகி நல்லொழுக்கத்தோடுவரு நன்மையெல்லாம் போயிற்றென்க. (௨௧)

இருள்புரிகங்குனாப்ப ணிரிந்தறக்கடலோன்போக
வருள்புரிவுணர்வுகாட்சி யறந்தவஞ்சுருதிதானந்
தெருள்பொறைநீதிவீரஞ் சீர்தகையுறுதிஞானம்
பொருள்புகழ்புலமைமற்றப் பொலிநலம்போயிற்றன்றே.

உரை.—இருண்டவிராநடுவிலே யறக்கடலோன்போ யவனோ டன்றுகூட வருள்முதற் பத்தொன்பதுமன்றி மற்றுள்ளநன்மையெல்லாம் போயிற்றென்க. (௨௨)

அலைபுறங்கொண்டஞாலத் தடரிருள்சீக்கயாக்கை
நிலைபுறங்கொண்டஞான நெடுஞ்சுடரனையான்போகக்
கொலைபுறங்கொண்டவேந்தன் குணத்துரிநகருநாடும்
வலைபுறங்கொண்டபாவ மலிந்திருள்மொய்த்ததன்றே.

உரை.—கடல்சூழ்ந்தபூவுலகி லடர்ந்தபாவவிருளை நீக்க வுடலைக்கொண்டுதித்த ஞானசுடரோன்போனதினா லிவனைக் கொல்லநினைத்த கொடியவேந்தற்கிணையாக நகருநாடு மெங்கு மன்னுயிரை யகப்படுத்தும்படி சூழவலைவைத்த பாவமலிந்துமயக்குவிக்குமிருளேமொய்த்ததென்க. (௨௩)

கதிதள்ளியுயர்வானேற்றுங் கனிந்ததம்வேந்தனோடும்
பதிதள்ளியமரர்போகப் பகையுநீண்பசியுநோயு
நிதிதள்ளிமிடியுங்கேடு நிசிதமுந்தீயயாவு
மதிதள்ளிமருட்டும்பேயு மறுகுடியாயிற்றன்றே.

உரை.— முடிவின்றி வானுலகில்வணங்கப்பட்ட தந்நல் விராசாவோடுகூட வவ்விடத்துநீங்கிவானவரொல்லாரும்போய் மறுகுடியாகப் பகை பசி நோய் தரித்திரங் கேடு பொய்யன்றி மற்றக் கொடியதெல்லாமு மறிவினைமயக்குவிக்கும் பேயும்வந்தனவென்க. (உச)

மணிவளர்முகிற்றண்ணூர்தி வானுடுக்கொடிதண்டிங்க
ளணிவளர்குடைகொண்டெங்கு மருணிழன்மன்னன்போக
பணிவளர்நகருநாடும் பனிப்புறப்பகைத்துவாட்டிப் [ப்
பிணிவளர்வினையின்செந்தீப் பிறிவிலாமேய்ந்ததன்றே.

• உரை.— ஊர்தியாகமணிமேகத்தையுங் கொடியாகவான் மீனையுங் குடையாகக் குளிர்ந்ததிங்களையுங்கொண் டெங்கு முயிர்குளிரும்படி யருளினிழலைச்செய்யு மன்னனாகிய வவ தரித்தநாதன்கன்றதினா லழகியநகருநாடு நடுங்கும்படி பகைத்துயிரைவாட்டிப் பிணிவளர்தற்குக்காரணமாயவினையாகியசெந்தீயோயாம லெல்லாவற்றையுமேய்ந்ததென்க. (உரு)

வேறு.

கண்ணகன்றவகழிகலங்கலிற்
றண்ணகன்றதாங்கந்தளம்பலே
யெண்ணகன்றகுணத்திவர்நின் பினென்
றெண்ணகன்றகைநீட்டினதொத்தவே.

உரை.— அங்ஙனம்போய்நகரைவிட்டுக் கண்ணுக்ககன்ற வகழிடத்துச்சேர்ந்தார், சேர்ந்தவிடத்தவ்வகழின்கலங்கநிற்க வலைகளுந்தளம்பாநிற்க் வெண்ணிறந்தநற்குணங்களையுடைய விவர்போகாமற்றடுத்து நில்லுங்களென்று விளங்கிய தன்கைகளை நீட்டினதன்மைபோலத் தோன்றிற்றென்க. (உசா)

அலையலைந்தலர்கூப்பியதாமரை
யிலையகந்தலையீசெழுந்தாடலந்
நிலையடைந்தனர் நீங்கலிர் நின்மினென்
றலைவடைந்துகைகூப்பியதொத்தவே.

உரை.— திரைகளலைவினாற்குவிந்ததாமரையு மலைத்து தி
ரைமேற்றோன்றியபாடலே யங்கேவந்த விம்மூவரைப்பார்த்
துப் போகாதேயுங்கள் நில்லுங்களென்று கலங்கிவருந்திக்
கையைக்கூப்பித்தொழுதன்மைபோலத்தோன்றிற்றென்க.
(உஎ)

நாகநெற்றியினன்மணியோடைபோ
லூகநெற்றியினன்மணியாறுபாய்
நாகநெற்றியினன்மலர்க்காவப்பா
லாகநெற்றியினன்மதிதோற்றிற்றே.

உரை.—யானைநெற்றியிலே தூங்குமணியாற்செய்த பட்
டம்போல மலையினுச்சியிலே தூங்கிவிழு மணிகளைக்கொழி
த்தவாறுவந்துபாயும் புன்னைமரங்களுச்சியிலேபூத்த சோ
லையைக்கடந்தவளவிலே வானத்தினுச்சியிலே தேய்ந்தபிறை
தோன்றும்படி யெழுந்ததென்க. (உஅ)

உறைகிடந்தவிண்வேந்துயிருண்டபலன்
றுறைகிடந்தயிலோங்கரசைப்பகைத்
துறைகிடந்தகடற்பறைக்கோர்குணி
லுறைகிடந்தனவொண்பிறைதோற்றமே.

உரை.—அன்றமுளைத்தபிறை யெப்படிதோன்றிற்றென்
னில் மழையைப்பொழியும் வானத்தின்மேலாளு மரசனுயி
ய வத்தேவகுழந்தையுயிரை நானேயுண்பேனென் றுறைபி
னுட்கிடந்தவேலையெடுத் தோங்கின கொடியமன்னனைப் ப
கைத் தவன்மேற்படையைக்கூட்டும்படி யுவர்க்கடலைமுர
சாகக்கொண் டதையடித்தகுறுந்தடியாக வப்பிறைதோன்றி
ற்றென்க. (உகூ)

சிதமிடைந்தலர்ச்சேடனையாட்கையிற்
சிதமிடைத்தலர்சேடனைநோக்குபக்

சிதமிடைந்தலர்சேடெனத்தாங்குபந்
சிதமிடைந்தலர்சேடுகண்ணொத்தவே.

உரை.—மாருத்தன்கன்னிலைமையாற் றூயவெண்மையுள்ள பூவனையதாய்க்கையிலே ஞானவடிவாய்மலர்ந்த வத்தேவகுழந்தையைக்காண வாசையினால் வானத்தினெருங்கிப் பூத்தபூ வடிவாய்ப்பலமீன்களேநிறையமலர்ந்த வழகியவானத்தின்கண்போலத் தோன்றிற்றென்க. (௬௰)

மனவணங்குவணங்கடிநாயகன்
மனவணங்குவணங்கில்வருந்தினார்
மனவணங்குவணங்கலிலாளனு
மனவணங்குவணங்குமணங்குமே.

உரை.—நவமணிகள் தம்மினுமழகியதென்று வணங்கிய திருப்பாதத்தையுடையநாதனுக்கு நிலைபெற்றுவந்ததுன்பம்மாறுலைமகண்டுவருந்தினார் மனத்திற்கொண்டதுயர்மாறுத குசையும் பைம்பொன்னினுமழகியவணங்காகிய மரியென்பவளுமென்க. (௬௧)

ஆரணந்தருமாண்டகையாகுலக்
காரணந்தருங்கட்புனல்கண்டிடர்
பூரணந்தருமார்புபுடைத்தெலா
வாரணந்தரும்வானுறக்கூக்குரல்.

உரை.—வேதத்தினாகமத்தைத் திருவுளம்பற்றித்தந்த நாதனுக்கிய வத்திருக்குழந்தை யடைந்ததுன்பத்தினு விவர்வருந்தியழுங்கண்ணீரைக்கண்டு பூரணமாய்த்துயரையடைந்து தம்மார்பினையடித்துக் கோழிகளெல்லாம்வானமட்டுஞ் சேரும்படிகூக்குரலிட்டனவென்க. (௬௨)

பேர்த்ததன்பெருமானுடைபீழைவா
னோர்த்ததன்மையுணர்ந்தழுதாலென
வார்த்ததண்பனிதாரையின்மல்கியன்
றூர்ந்தடைந்தமழைக்காவழுதாயதே.

உரை.—வானமுந் தன்னிடத்தினின்றுபோந் தவதரித்த தன்மன்னவனாகிய வித்திருக்குமாரனுற்றதுன்பங்களையாராய்ந்துவருந்திக் கண்ணீர்விட்டழுதாற்போலக் குளிர்ந்தபனியைப்பெய்தது, மழைத்தாரைபோலப் பனிபெய்தமிகுதியாலன்றுபசியதழைகள் பனித்துளிவிட்டொழுகிக் காவுமழுத தன்மைபோலத் தோன்றிற்றென்க. (௧௩)

கருகருவெனக்காடைகளுழந்தன
குருகுருவெனத்தோகைகணைந்தழும்
புருகுருவுதலோடிவர்போதலா
லருநறுப்பொழிலாரழுமோதையே.

உரை.— காடைகள் கருகருவென்றழவும் மயில்கள் குருகுருவென்றுநைந்தழவும் புருக்கள் குருவிநைந்தழவு மிம்மூவர்போனதினால் வாசனைநிறைந்த சோலைகளெங்கு மழுமோசைதோன்றிற்றென்க. (௧௪)

கிளியழக்குயில்கேட்டழத்தேனுறு
தளியழச்சிறைநைந்தழவாவென
வளியழத்துயர்மல்கிவனத்தெலா
வுளியழத்தகவோரழவேகினார்.

உரை.—கிளியுங்குயிலுந் தேனுண்ணுமற்கிடந்தவண்டு மன்னமுமழாநிற்க வையோவென்றிரங்கிக் காற்றழுதுவீசத் துயர்மிகுதியால் வனத்திலிடங்களெல்லாமழாநிற்க விவருமழுதுகொண்டுபோனாரென்க. (௧௫)

கான்மறந்தனகாமலரன்னதே
தேன்மறந்தனதேனினமன்னதே
பான்மறந்தனமான்பறழன்னதே
யான்மறந்தனதம்பிள்ளையன்னதே.

உரை.—அன்றுகாவிலுள்ளமலர் வாசனைவிடமறந்தன, வண்டுகள் தேனையுண்ணமறந்தன; மான்குட்டிகள் பாலையுண்ணமறந்தன, பசுக்கள்தங்குட்டிகளைமறந்தனவென்க. (௧௬)

சுருதியேந்துசுதற்றுமிப்பேனெனக்
கருதியேந்துகுரோதங்கதித்தெனப்
பருதியேந்துபடம்படராமுனர்
குருதியேந்துகுணக்குசிவந்ததே.

உரை.— அப்பொழுது விடியக்காலமாகிக் கீழ்திசைசிவந்ததெப்படிதோன்றிற்றென்னில் வேதநாயகனாகியவத்திருக்குமாரனைக்கொல்லும்படி யெரோதனாகியமன்னனினைத்தகொடுமையைக்கண்டு வானங்கோபித்தாற்போலச் சூரியனுதயத்துமுன்னே யிரத்த முகத்திலேபாய்ந்ததன்மைத்துக் கீழ்திசைசிவந்ததென்க. (௧௭)

முழவெழுந்தொனியொப்பமுந்நீரொலி
யெழவெழுந்துபொரக்கதிரொய்சரம்
விழவெழுந்தவெய்யோன்சிவந்தெய்திவா
னுழ்வெழுந்துயராற்றிலதோன்றிற்றே.

உரை.—போர்முரசின் முழக்கம்போலக் கடல்முழங்காநிற்கச் சூரியனெழுந்து கொடியவரசன்மேற் போர்செய்யும்படி கதிர்களையம்புகளாகவிட்டுச் சிவந்தமுகத்தோடுதோன்றி வானுலகு மழும்படி யிம்மூவர்க்குவந்ததுன்பங்களைத் தான்பொறுக்கமாட்டாததன்மையென்று தோன்றிற்றென்க. (௧௮)

பானும்பானொடுபாசறைபட்டழும்
வானும்வானொடுமண்ணுமிரங்கின
தேனுமேதுமுணர்கிலமாக்களுங்
கோனுங்கோடணைகொண்டிரங்காயினார்.

உரை.—இங்ஙனஞ் சூரியனுஞ் சூரியனோடு வருந்தியழுதவானுலகுமண்ணுலகு மிம்மூவர்க்கிரங்கினவு மிவரரொன்று மிவர்பிரிந்துபோகிறதொன்று மொன்றுமறியாத மற்றமனிதரு மெரோதனாகியமன்னவனுங் கொடுமையாக விரங்காதிருந்தாரென்க. (௧௯)

சைதிரநீங்குபடலமுற்றும்.
ஆகப் படலம்-௰௩ இ விருத்தம்
௲௨௱௩௰௪.

பதினான்காவது.

இளவன்மாட்சிப்படலம்.

வேறு.

இரங்குபடர்கானவையுநைந்தழுதிரைக்குந்
தரங்குபடர்வேலையிறளம்பியலைநெஞ்சா
ரரங்குபடர்வான்றொழுமருட்குழவியேத்திக்
குரங்குபடர்காட்டுநெறிகொள்ளவலமுற்றார்.

உரை.—சொன்னதன்மையிற் காட்டிலுள்ளதெல்லா மிவர்க்கிரங்கியழாநிற்க விரைத்தலைந்த கடலைப்போல வலையாநிற்குநெஞ்சினையுடையமரியுஞ்சூசையு மகன்றவானுலகத்தோர் வணங்குங்கருணையையுடைய திருக்குமாரனையேந்தி யொளித்துப்போம்படி மனிதர்சத்தடியில்லாமையால் விலங்கினம் படர்ந்தகாட்டுவழியேபோதற்கு வலத்தேபோனாரென்க. (க)

பிழைக்குலமளிப்பவர்பிழைப்பிடமிலார்போ
லிழைக்குலநடுக்கமெனவுட்குலையநைந்து
மழைக்குலமிடத்துநுழையின்மருளமல்குந்
தழைக்குலமிடத்துநுழையச்சடுதிபோனார்.

உரை.—பாவிகளைப்பிழைப்பிக்கவந்தவர் தாம்பிழைக்கும்படி யிடமில்லவரைப்போல மான்கள்வெருவின தன்மைத்துத் தாமுள்ளஞ்சி நைந்து மேகங்களிடத்துநுழையு மின்களோவென்று மயங்கும்படி தாந் தழைத்தகாட்டிலே நுழைதற்கு விரைந்துபோனாரென்க. (உ)

இருத்தியெழுவானரசனீரடிநனைப்ப
வருத்தியெழுதுன்பமுகிலார்த்துமிழ்கண்மாரி
திருத்தியெழுமாதவனுளைந்துளையுடேற்றுக்
கருத்திலெழுமார்ந்ததுயர்கண்டினைபசொன்னான்.

உரை.—செல்வவானரசனாகிய திருக்குமார னிருபாதந்தையு நினைக்கும்படி தன்னன்பினாலெழுந்த துன்பமென்னுமேகமிடித்துப்பெய்த கண்ணீரென்னுமாரியைப் பொழிந்த மாதவனாகியருசை வருந்தி வருந்தியமனத்திற்றேறுதலின்றிக் கொண்டதுயரைக் கொப்புளித்தாற்போல விவற்றைச் சொன்னானென்க. (௩)

விண்முழுதுமேற்றதனிவீரமுதலோனே
புண்முழுதுமேற்றியபுலாலயிலனோடு
மண்முழுதுமொன்றுபடமல்கியமர்செய்தா
லெண்முழுது நீத்தநின்தாண்மையெதிருண்டோ.

உரை.—வானுலகத்தோரெல்லாருமொருப்பட்டுவணங்கு நிகராதவல்லமையையுடையமுதலோனே! தமக்குவிருந் தமருமென்னு கழுசமுதலியபுள்ளெல்லாம்வணங்கும் புலாவினா னாறும்வேலையுடைய வெரோதனோடு மற்றவுலகமெல்லாங்கூடிப்போர்செய்யவத்தாலு மட்டொன்றில்லாத வுன்னுடையவல்லமைக் கெதிருண்டோவென்றானென்க. (௪)

புல்வினையுளைந்தழவுதித்தருள்புரிந்து
நல்வினைதளிர்ப்பநலம்யார்க்குமிடுநல்லோய்
சொல்வினையுணர்ந்துனுயிர்கோறனதாண்மைக்
கொல்வினையெனக்கருதுமிவ்வுலகிலுண்டோ.

உரை. — தீவினைகளுளைந்தழும்படி நீமனிதனாய்ப்பிறந்து நமக்கருளைச்செய்து நல்வினைகள்வளர்ந்துதளிர்க்கும்படியெவர்க்குநன்மைசெய்யுநாதனே! கொலைத்தொழிலைநினைத்துன்னுயிரைக்கொல்லும்படி தம்வல்லமையினா லாருந்தன்மையென் றிவ்வுலகினினைப்பாருண்டோவென்றானென்க. (௫)

தொல்லையுளநம்வினை துடைத்துநமைவீட்டில்
வல்லையுளவன்பொடுகுப்பமனுவந்தோ
பொல்லையுளநந்துயரொழித்திடநினக்கே
யெல்லையுளதொன்றுமிலவேண்டுமிடர்கொல்லோ.

உரை.—நமக்குள்ள பழம்வினைகளைத் துடைத்து வல்லமையுள்ள தயையைக்கொண்டு நம்மைப்பரமவீட்டிலே சேர்க்கும்படி மனிதனாய்ப்பிறந்தநாதனே! பிறந்தவுடனே நம்முடைய துயர்களைத்தீர்க்கும்படி யுனக்குமட்டில்லாத துன்பங்களடையவேண்டுமோ வென்றானென்க. (௬)

முற்றமுதலாயுலகமூன்றுதொழவான்மேற்
பெற்றமுதலீறிலபெருந்தகையைமண்மே
லுற்றமுதல்வீடிலவிலங்குறையுள்வந்தா
யிற்றமுதனாடகலல்வேண்டுமினிக்கொல்லோ.

உரை.— நீயெல்லாத்துக்குமுதலாகி யுன்னைமூவுலகமும்வணங்காநிற்க வான்மேல்வீற்றிருந்து ஆதியந்தமின்றிப் பெருந்தகைமையுடையோனே! நீயவதரித்துப் பூவுலகில்வந்திருக்கும்படி மனையுமுதலாயின்றி விலங்கின மொதுங்குமிடத்திலேபிறந்தா யிதுமுதற்கொண்டினிநாடுமகன்றுபோதல் வேண்டுமோவென்றானென்க. (௭)

ஞானமுறுசீலமிலநட்புறவுமில்லா
வானமுறுவேதமிலமாண்பருளுமில்லா
கானமுழுகாய்ந்தசுரமக்கடைகிடந்தா
ரீனமுறுநாடடைதல்வேண்டுமினிக்கொல்லோ.

உரை.—ஞானமுஞ் சீலமு நட்பு முறவும் வான்கதியைப் பெறுதற்கு வழியாகியவேதமு மாட்சிமையுந் தயையுமென்னுமிவையெல்லாமின்றி யழற்காய்ந்தகானச்சுரத்தி னடந்தப்பாற்கிடந்தவீனநிறைந்தநாட்டிற் கினிப்போதல் வேண்டுமோவென்றானென்க. (௮)

வெவ்வினைவிளைத்தடுமிவ்வாழ்வுவிடமென்று
மைவ்வினைமறுப்பவிவண்வந்துதுயர்வேண்டின்
மொய்வ்வினைமுதிர்த்தமுழுதென்மிடிமையல்லா
லெவ்வினைதுலைக்கடைதல்வேண்டுமினையையா.

உரை. — இவ்வுலகின்வாழ்வுகள் தீவினையை விளைத்துக் கொல்லுதலுஞ்சென்று பாவத்தின்வினைகளை மறுத்தழிக்கும்ப

டி. நீயிங்கேபிறந்து துன்பங்களையடைதற் காசையுண்டாயி னதற்குத் துயர்நிறைந்த வென்றுரித்திரத்தருந் துன்பங்களை ல்லாதே துலைக்குப்போ யெத்துயரைத்தேடல்வேண்டுமினி யையாவென்றானென்க. (௯)

விஞ்சியதிறஞ்செறியுமிஞ்சைமலிவல்லோய்
துஞ்சியநிலத்தி னுயிர்தோன்றிவினை நீக்கி
யெஞ்சியநலந்தருவையென்றறிவர்யாரோ
யஞ்சியதோர்தன்மையிதுவென்றறைவரொன்றான்.

உரை.—மிக்கவல்லமையையு மறிவையுமுடைய வல்லோனே! பாவத்தாற் பிணமாய்க்கிடந்தபூவுலகிற் கோருயிராகவந்து வினைகளை நீக்கி யில்லாதநன்மைகளைத்தருவாயென் றிங்கே யாரறிவா ரிப்பொழுதொளித்துப்போகிறதைக்கண் டஞ்சாதின்றுயென்று சொல்லுவாரோவென்றானென்க. (௰)

இற்றுறுமருத்தியிவியம்பினனியம்பப்
பற்றுறுமுணர்ந்தபலவும்பகர்தறேன்று
முற்றுறுமாத்தையெனு நீத்தமுழுகிச்சொல்
லற்றுறுமழுந்தொழிலலரலெவனுமாற்றான்.

உரை. —ருசையுட்கொண்டவன்பினு விவைசொல்லிப் பின்னையு மாசையோடேசொல்லநினைத்தபலவுஞ் சொல்லமாட்டாமலடைந்ததுன்பவெள்ளத்தின்முழுகிச் சொல்லற்றுப் போயழுவதன்றி யொன்றுமாற்றாதிருந்தானென்க. (௰௧)

வேறு.

ஆசைவெற்புவீழாத்தைவாரியுட்
ருசைபட்டய்யச் சுழியின்மூழ்கலிற்
பூசைவாயினுள் புகற்கைதந்தா
மாசையங்களை மருவச்சொல்லினுள்.

உரை.—தன்னன்பினுசையென்னு மலையினின்று விழுந்த துன்பமென்னும்வெள்ளத்திற் ருசையகப்பட்டுச் சந்தேகமென்னு நீர்ச்சுழியிலேமுழுகி யமிழ்ந்திவருகையிற் றேவவ

ருச்சனை விடாத வாயினையுடைய மரியேயென்பவ ளாதலானை சொல்லென்றுங்கையைச்சுவைக்குத்தந்து மனவூக்கமென்னும் பொற்களையில்வன்சேரும்படி சொன்னாளென்க. (௩௨)

உருக்குங்கா னுல்குயிரெலாங்கெட
முருக்குங்காலமே முடிந்துபோயருள்
பருக்குங்காலமாய்ப் புரந்துபாதுகாத்
திருக்குங்காலமென் றிளவலாயினான்.

உரை.—முன்னாளி லிவ்வாண்டவன் கோபமிகுதியாற் பூவுலகினுள்ளவுயிரெல்லாந் தீயிலேயுருக்கினாற்போலக் கெடும்படி கொலைத்தொழிலைச்செய்வானாயினு மிப்பொழுதக்கொலைக்கால முடிந்துபோ யருள்மிகும்படிகாலம்வந்து நம்மையிரட்சித்துக்காத்தற்குக்காலமிதென் றுகுழந்தைவடிவாய்த்தோன்றினானென் றுளென்க. (௩௩)

மண்ணை வேண்டினும் வகுத்துவாழ்வரு
விண்ணை வேண்டினும் விரும்பியீகுவான்
கண்ணை வேண்டினு மளிக்குங்காறனை
யெண்ணிவேண்டினு மிகல்செய்வான்கொலோ.

உரை.— இவனே வேண்டியவர்க்கு மண்ணரசைத்தந்து நல்லறத்தைச்செய்து முடியாதவாழ்வினையுடைய விண்ணரசைவேண்டுபவர்க்குக் கொடுக்குந்தன்மையுடையனாய்த் தன் கண்ணை வேணுமென்றாற் கொடுக்கும்படி தயையுமுடையனாய்வந்தகுழந்தை தன்னைப்பற்றி வேண்டியிருந்தாலு மெவருக்கும்பகைசெய்வானோவென் றுளென்க. (௩௪)

மணியுயிர்க்குநாண் வடிவிற்றோன்றினன்
பிணியுயிர்க்குமர லொசெய்பிழையாற்
றணியுயிர்க்கெலா முறுதித்துதன்
னணியுயிர்க்கிட ரகமாள்குவான்.

உரை.— தன்மணிவடிவிற்ற் குழந்தையாய்ப்பிறந்தவன் பிணியைச்செய்புமயக்கத்தோடேகூடியவாசையால் வந்தபாவ

மது துயர்களாற் றணிவடையுற்றவுயிர்க்கெல்லாந் தானேயுற்றுசெய்திரட்சிக்கும்படி தன்னழகியவுயிர்வருந்தி நமக்குவேண்டிச் சாகவந்தானென்றுணர்க. (௰௫)

இறந்துநம்முயி ரிரங்கிக்காக்கவந்
தறந்துறைந்தவ னிறத்தற்கஞ்சுமோ
திறந்துறைந்துழுஞ் செகத்தையாள்பவன்
மறந்துறைந்தபுன் மதுகைக்கஞ்சுமோ.

உரை.—இங்ஙனந் தானிறந்து நம்முடையவுயிர்களையிரட்சிக்கும்படி மனிதனாய்வந்த சகலவறங்களையுடையோ னிப்பொழுதிறத்தற்கஞ்சுவானோ? சர்வத்துக்கும்வல்லவனா யுலக மூன்றையுமாள்பவனைப் பாவியுடையசிறியதோர் வல்லமைக்கஞ்சுவானோ வென்றுணர்க. (௰௬)

நஞ்சினாவி ரருந்துநாற்படைக்
கஞ்சிலானறி வருள்வல்லாண்மையி
டெஞ்சிலானென விறைஞ்சிக்கூறினா
னெஞ்சினால்மு தார்ந்தநேமியான்.

உரை. — நஞ்சாகவுயிரைக்கொன்றுண்ணு நால்வகைப்படைக்குந் தானஞ்சல்செய்யா னறிவையுமருளையுமாண்மையையும்பெருமையையு மெலிவின்றிநிறையக்கொண்டவனென்று வணங்கிச்சொன்னா னுயிர்த்தானிறைந்தகடலொத்தநெஞ்சினையுடையமரியென்பவனென்க. (௰௭)

புடைவரும்புகழ் பொலிந்தமிக்கயே
லடைவருந்தலைய யணிந்ததாபொழு
துடைவருங்கருத் துணர்ந்தவாண்மையைத்
தொடைவருங்கனி பாவின்சொற்றினான்.

உரை.—அப்பொழுது புடையில்வந்த மிக்கபுகழையுடையமிக்கயேலென்னும்வானவனடைதற்கரிய தலையையுடையநாதன்றிருப்பாதத்தைவணங்கிக் கெடாதவிவனுண்மையைநினைத்துப் பாவாகச்சுவைக்குறியு மின்பமுமாகும்படி சொன்னானென்க. (௰௮)

வேறு.

அஞ்சுவான்கொல்லோநீதி யணிக்கலத்திலங்குவீரத்
தெஞ்சுவான்கொல்லோஞாலத் தியாவரும்பணிப்பவாணீ
விஞ்சுவான்கொல்லோவென்ன மேவியவெசித்துநாடார் [மை
துஞ்சுவானுணர்ந்தார்மூன்றுள் சுருதிசேர்கொழுகொம்ப
ன்னேய்.

உரை —வேதமென்னுங்கொழுந்து மேற்படருங்கொழு கொம்போடொத்தவுமையே! இத்தேவகுழந்தை யஞ்சுவானோ? நீதிவிளங்கும்வீரத்தில் மெலிவானோ? உலகெல்லாநடுங் கும்படி வல்லமையின்மிகுவானோவென்று நீரிப்பொழுது பேரிறவெசித்துநாட்டிலுடையோர் தாமடிந்துகெடும்ப டி மூன்றுளிலே நன்றாயறிந்தானென்றனென்க. (௰௬)

நினைந்தயாவையுநினைந்த நிலைக்கவைநிகழ்த்துந்தன்மை
புனைந்தமாமதுகைகாட்டப் புணர்ந்தபுற்குூரற்கொண்டு
முனைந்தகாவிவன்மூன்றுளின் மூரிந்தெசித்தஞ்சிவாட
வனைந்தயாவையுநினக்கேன் வகுத்தியானுரைப்பலென்றான்.

உரை. —நினைத்தயாவையு நினைத்ததன்மைக்கு நிறைவேற் றும்படி தனக்குள்ளவல்லமையைக்காட்ட மூன்றுளிலேயிவ ன்றனே சினந்தகாலத் தொருசின்னப்பிரம்பினைக்கொண்டு வசித்தாரெல்லாருமெலிந்தஞ்சிக்கெடும்படி செய்ததெல்லா நானுனக்குச் சொல்லிக்காட்டவேண்டுமோவென்று னெ ன்க. (உ௰)

வீங்கெழுந்துயருனாற்று வெதிர்ப்பெழும்புணரிநெ
ஞ்சிற்
பூங்கெழுங்கொடியோன்சொல்லிப் புலாயறவுணர்ந்ததேனு
பீங்கெழுந்தெளியனென்ன விரிந்தநாயகனைவாழ்த்த [ன்.
வாங்கெழுந்திறவினுண்மையறைதியென்றறைந்தான்வானோ

உரை. —உட்கொண்டமிக்கதுயராற்றுமற் கலங்கியெழுந் த கடவிளைத்த நெஞ்சினையுடைய பூங்கொடிபோலுமுமையு மைசொல்[illegible]செய்தியை நன்றாயறிந்தானு

மிக்கேமனிதனு மெளியனைப்போலத் திரிந்தநாதனைவாழ்த்தும்படி யங்கேமூன்றாளிலேதோன்றிய விவனுடையவல்லமை சொல்லிக்காட்டுவாயாகவென்று ஆசைசொல்ல மீளவும்வானவன்சொன்னானென்க. (௨௧)

போரவோங்கியவெற்புச்சி பிளந்தவின்னைசனியேறு
நேரவோங்கடவிற்சீற்ற நெறித்தருள்வணங்காச்சென்னிப்
பாரயோனென்பானுதன் பணித்தநற்பூசைசெய்யா
வீரயோகத்திபூதர் விலக்கியிக்கல்லற்செய்தான்.

உரை.—ஓங்கியமலையினுச்சிபிளந்துபோரும்படி மேகத்தினின்றுவிழு மிடியைப்போலத் தனக்குள்ள வோங்கியவல்லமையாற்சீறிச் சினத்தானெறித்துத் தலையால்வணக்கமில்லாத சென்னியையுடைய பாரயோனென்னுமன்னனுண்டவன் கட்டளையிட்டபூசையைச் செய்யாதபடி வீரத்திலுயர்ந்தபூதரைவிலக்கி மிகவு மவர்க்குத் துன்பஞ்செய்திருந்தானென்க. (௨௨)

உடைக்கலத்திலங்கிச்செற்றத் துடன்பிருள்பருகுநெஞ்சா
னடைக்கலத்தடைந்தபூதர்க் கடிமையென்றியற்றும்பீழை
துடைக்கலற்றெவருமெஞ்சித் தொறுந்தொறுமழுதகண்ணீர்
படைக்கலத்தருதிபோலப் பைதிரஞ்சிதைத்ததன்றே. [ர்

உரை.—பூணையணிந்துவிளங்கிப் பின்னையுஞ் சலஞ்சாதித்துக் கொண்டபகையா லிருண்டநெஞ்சினையுடைய கொடியமன்ன னடைக்கலமாக முன்றன்னாட்டிலேவந்தபூதரை யடிமைகளென்றுபாவித்து நாடோறுஞ்செய்த வருத்தத்தைப்பொறுக்கமாட்டாமல் மெலிந்தெல்லாருங் கூட்டங்கூட்டமாயழுதகண்ணீர்தானே படையாகநின்று அந்நாட்டைமுழுதுங் கெடுத்ததென்க. (௨௩)

நொந்துநொந்தழுதவோதை நுழைந்துயர்வானத்துச்சி
வந்துவந்தருளின்மிக்கான் விருந்தினர்க்கிரங்கிக்குன்றின்

ழுந்துநின்றருணமேய்த்த மோயிசன்விளித்தோர்குரல்
தந்துநின்குலங்கொல்கோன்கட் சடுதிதூதேகென்றான்.

உரை. — அங்ஙன மன்றூர் நொந்துநொந்து நாடோறு
மழுதவோசையே வானத்தினுச்சி நுழைந்துவந்து தலையி
ன்பிக்கநாத னதைக்கேட்டுவருந்தினனூதர்க்கிரங்கி மலையின்
முன்னேயாட்டைமேய்த்திருந்த மோயிசனையழைத் தவன்
கையிலே யொருபிரம்பினைத்தந்து உன்குலத்தாரைவருத்தி
ய கொடியமன்னனண்டைக்குச் சீக்கிரமாய்த்தூதாகப்போ
வென்றானென்க. (௨௪)

கொடியகோன்வெருவலன்றான் குலவுறிவெருவப்
விடியமாபூசையாக விடுதியென்றவன்விடாதேல் [பேசி
நெடியகுரலைச்சூழோங்கி நிருபனோடுவருமஞ்சக்
கடியதோர்துயராங்குய்த்தெதர் கதத்திறல்காட்டுகென்றான்.

உரை.— நீயக்கொடுங்கோனுக்கஞ்சாம லவன்குலைந்தஞ்
சும்படிபேசி நானேயுதயத்திலே தான்கட்டளையிட்ட பூ
சையாம்படி யூதரைவிடுவாயாகவென் றவனோடேசொல்லி ய
தற்கவன்விடானாயி னிந்தச்சூரலையோங்கி யிராசனோ டனை
வருமஞ்சும்படி கொடியதுன்பங்களைக்கொண்டுவிட்டு என்
கோபத்தின்வல்லமையைக் காட்டுவாயாகவென்றானென்க.
(௨௫)

ஒளியிற்சொன்னயாவு முணர்ந்தமோயிசன்போய்க்கூ
வாளியிற்கொடுங்கோன்கேளா தாங்கவனெறிந்தசூரல் [ற
வாளெயிற்றடுஞ்செம்பாந்தள் வடிவெடுத்தெழுந்தங்காடி
றெயிற்றழலுங்கட்ட நிறையும்விட்டெடற்றிற்றன்றே.

உரை — ஆண்டவன்சொன்னதெல்லாவற்றையு மொழு
ங்கோடுகேட்டமோயிச னிராசாவினண்டைக்குப் போயிச்
சொன்னான், சொன்னவளவிலே யாளியினுங்கொடிய மன்ன
னிணங்கக்கேளாதிருன் மோயிசனவன்முன்னே தானேந்
திய பிரம்பையெறிந்தான், எறிந்தபிரம்பும் கூர்ந்தவெயிற்
றைக்கொண்டு கொல்லுஞ்செம்பாம்பினுருவத்தையெடுத் த

ங்கொழுந்தாடாநிற்க நீண்டபல்லின்வழியாகவுங் கண்வழியா கவு நிறைய நெருப்பினைவிட்டுச்சீறுநின்றதென்க. (உசு)

சாத்திரமாயவித்தைத் தன்மையில்வரும்பற்பல்
காத்திரங்காட்டியன்னோர் காட்டியவரவைத்தேவ
சூத்திரவரவுநுங்கத் தொடர்ந்துமோயிசன்வால்வவ்வி
வேத்திரமாயதன்மை வேந்துகண்டஞ்சினானே.

உரை.—அதைக்கண்டவிராசா மாயவித்தைக்காரரையழை ப்பித்து அவர்களும் பிரம்புகளைப்போட்டுப் பாம்புகளாக த்தோன்றும்படிசெய்தார், ஆயினு மவர்காட்டிய பாம்புக ளெல்லாவற்றையுந் தேவசூத்திரத்தால் முன்றோன்றினபாம் புவிழுங்கிற்று. அப்பொழுது மோயிசன்போய்த் தன்பாம் பின்வாலைப்பிடித்தவளவிலே முன்னிருந்தபடி பிரம்பாகநின் றது. இதெல்லா மிராசாக்கண் டுள்ளஞ்சினானென்க. (உஎ)

அஞ்சினானெனினுந்தேவ வருச்சனைக்கிடஞ்செய்யா
நெஞ்சினன்கொடுமையாற்ற நீரொளிக்கமலத்தன்னை
தஞ்சிவாழ்பொய்கைபோகிச் சொன்னவைமறுப்பாயாயி [த
னெஞ்சிலாத்துயரத்தாழ்வா யென்றுமோயிசன்சொல்கின்
றான்.

உரை.—அங்ஙனமன்ன னஞ்சினுந் தேவபூசைக்கிடங் கொடாமற் றன்கொடுமையின் வேகத்தையாற்றும்படி நீரி ற்றவழுநெருப்பாகிய தாமரையின்பள்ளியின்மே லன்னங்க ளுறங்கி வாழாநிற்கு மொருதடாகத்துப்போகையின் மோ யிசன்கூடப்போய் நான்சொன்னதை நீமறுப்பாயாகில் முடியாததுன்பங்களிலே யமிழ்ந்துவாயென்று சொன்னா னென்க. (உஅ)

சொல்வியவிசையிலேந்துஞ் சூரலைச்சுழற்றிநிற்பக்
கல்வியமலர்கள்வாடக் கயவினத்தளர்ந்துமாள்க
வல்வியர்மயங்கயாரு முண்ணுநீரின்றிச்சோரப்
புல்வியபுனல்கள்யாவும் புண்ணினீராயிற்றன்றே.

உரை.—மோயிச னதுசொன்னவளவிலே தானேந்திய பி ரம்பினை மேலேசுழற்றினவுடனே நீர்மலரெல்லாம் வாட்டவும்

கெண்டைமூதன் மச்சங்களெல்லாஞ்சாகவுங் கற்றோரெல்லா-
ரு மதிசயித்துமயங்கவு மற்றெவருமுண்ணும்படி தண்ணீரி-
ன்றிச்சோரவு மங்கிருந்தபலவகைத்தண்ணீரெல்லா மிரத்த
மாகநின்றதென்க. (௨௯)

மீட்டருங்குரல்விசி வீழ்ந்தன நுணலைமாரி
நீட்டருஞ்சயனமாடஞ் சித்திரக்கூடம்பாவு
மீட்டருங்கனகச்சாலை யிவைமுதலிடங்கடோறும்
வாட்டருந்துயர்கொணாட்டின் மல்கிய நுணலையீட்டம்.

உரை.—மீளவு மோயிசனரியகுரலைவீசாநிற்ப வெங்குந்த
வளைகள் மாரியாகப்பெய்தன,பெய்தமிகுதியா லிராசாப்படு
க்கைவீடுஞ்சித்திரக்கூடங்கள்பொக்கிஷச்சாலையிவைமுதலா
கவிடங்கடோறு மொன்றும்விடாமல்முடியாததுன்பங்கொ
ள்ளும்படி நாடெங்கு நிறைந்ததவளைகளே மிக்கன,வென்க. (௩௰)

பண்ணிகவிலைசயாற்கோகு பயன்படாதென்னவன்று
னெண்ணிகல்விடாமைநாத னேவலிற்குரலோங்கி [யித்துப்
புண்ணிகளெண்ணில்மொய்ப்ப வுழிதொறும்வெருவுமொ
புண்ணிகழ்கிடந்தநாடு பொருவிலாவருத்திற்றன்றே.

உரை.—வீணையினினியவோசையாற் கழுதைபயனைக்கொ
ள்ளாததுபோல வவ்வரசனுஞ் செய்ததைக்கண்டு பயனுக்
கொள்ளாமனினைத்தபகையையும்விடாமலிருந்ததினா லரண்
டவன்கட்டளையினால் மோயிசன்பிரம்பினையோங்கினவளவி
லே மட்டின்றியுண்ணிகள்நிறையமொய்த்தன,அவற்றாலெங்
குநிறைந்து ஒருபெரும்புண்ணாகநின்ற வந்நாடு நிகரின்றிவ
ருத்தத்தைக்கொண்டதென்க. (௩௧)

தீயினங்குளித்தநெஞ்சான் செருக்குளத்தறுதுசீறத்
தூயினம்வெருவமீண்டு குரலையாட்டித்தன்மைத்
தீயினமெண்ணுமீறு மின்றியேயெவனுமூய்த்து
வீயினமலர்ந்தநாடு வீந்ததோர்பிணத்திற்றுமே.

உரை.—நெருப்பினைக்குளித்த கொடியநெஞ்சானுங்கா
ரத்தைவிடாமற்சீறுநிற்க நல்லோரெல்லாரும் வெருவும்படி

டீளவு மோயிசன்பிரம்பினை பரட்டினவளவிலே மட்டு முடிவு மின்றி யீக்களே யெங்குந்திரண்டு மொய்த்தனன் முன் பூமலர்ந்தநாடு செத்தபிரேதத்தின் றன்மையாய்த்தோன்றிற் றென்க. (௩௨)

ஒருவுறவரசன்போக விடைசெயவிடருநீங்கு
மூருவறவிடர்களீங்க வுரைத்தவைமறுத்துச்சிறச்
செருவுறச்சாதியோங்கச் சித்துராமுதன்மாவெல்லாந்
தருவருவுணராநோயாற் றளர்ந்துநொந்திறக்குமாதோ.

உரை. — அஞ்சினவளவிலே மன்னன் யூதரைப்போகவுத் தாரஞ்செய்வா னவ்வளவிலே தோன்றியதுன்பங்களுநீங்கும், நீங்கியவளவிலே மீளவு மவன்றான்சொன்னதைமறுத்துச் சீறுநிற்ப மோயிசன் றிரும்பிக்குரலையோங்கினு னோங்கியவளவிலே யானைமுத லுள்ளவிலங்கினங்களெல்லாங் குணங்கெட்டு மற்றொருவனாற்கண்டுபிடியாதநோயைக்கொண்டுசாகாநின்றனவென்க. (௩௩)

சுட்டநோயாதினாற் றுகடருந்தருக்குநீக்க
விட்டநோய்போராவேகத் திவன்சுழல்குரறன்னாற்
குட்டநோயரசனாதி கொண்டெளங்குலத்தார்யாரும்
பட்டநோயொன் றுமின்றிப் பரிவறயூதர்வாழ்ந்தே.

உரை.— தீயாற்சுட்டபுண்ணுதினாலும் பாவமிகுதியா லவ்வரசன்கொண்ட வாங்காரமாறுமையினு லதைநீக்கும்படியாண்டவன்வற்கிட்ட முற்சொன்னதுன்பங்கள்போராமலு மோயிசன்றிரும்பிச்சுழன்ற குரலினு லரசன்முத லங்குள்ளவனைவருங் குட்டவியாதியைக்கொண்டா ரந்தநாவுயூதர்களுக்குள்ளே யொருவனுக்காகிலும்வாராமற் றுன்பமொன்றின்றியூதர்வாழ்ந்திருந்தாரென்க. (௩௪)

உலமுகத்தருந்துந்தீய்நெஞ் சுருவுறக்குரலோங்கி
யலைமுகந்தருந்தியையென் றழன்முகிலார்த்துமின்னிச்
சிலைமுகத்தருந்திக்கான்ற சீலெனப்பெய்தவாலி
கொலைமுகத்தருந்தியெங்குங் * கொல்லுயிரளவொன்றுண்
டோ.

உரை.— மீளவு நெருப்பினைமுகந்துண்ட நெஞ்சினையு
டையம்[illegible]னஞ்சும்படி பிரம்பினையோங்கியவளவிலே கட
லினீரைமுகந் தொருகணத்திலெழுந்தவழலைக்கொண்டமேக
ங்கள்முடியார்த்து மின்னிப் பெருங்கல்லுக்களைமுகந்துவி
ட்டாற்போலத் திரளாய்ப்பெய்தவாலங்கட்டிகள் எங்குமு
ட்டின்றியுயிர்களைக் கொன்றனவென்க. (௩௫)

மதங்கலந்தரசன்கொண்ட மறங்கழிந்திலனுந் தன்மை
கதங்கலந்தசைத்தசாதி கடுகியபதங்கமெங்குஞ்
சிதங்கலந்தலர்ந்தநாட்டிற் சிறுபுலொன்றின்றியாவு
மிதங்கலந்திமைக்குமுன்ன ரிற்றழித்தாயிற்றன்றே.

உரை.— மதத்திற்பொங்கி யரசன்சாதித்தசலத்தைவிடா
மையால் மீளவும் வெகுண்டசைத்தபிரம்பினால் விரைந்துதி
ரளாய்மொய்த்தவிட்டில்களே குளிர்ச்சிபடமலர்ந்தவந்நாட்
டி லொருபசும்புல்லில்லாதபடி யெல்லாமுமொருநிமையி
மைக்குமுன்னே யிற்றழித்தனவென்க. (௩௬)

துச்சிறையுளம்போன்றள்ளுந் தொகுதியாலிருள்மொ
ய்த்தாடாக்
கைச்சிறைகடக்கநேற்றுங் காற்சிறையாகியெங்கு
மெய்ச்சிறைபட்டயாரும் வெருவியார்த்தலறிநோக
மைச்சிறைபட்டநாடு மறச்சிறைநரகொத்தாமால்.

உரை.— அத்தனையாக்கினைகண்டுதடுங்கித் தெளியாதகொ
டுமன்னனுள்ளமிருண்டதன்மைத் தெங்குமள்ளத்தக்க நெ
ருங்கியடர்த்தவிருள்மொய்த்ததனு லடமாட்டாதகைகள் சி
றைபடவு நடக்கமாட்டாதகால்கள் சிறைபடவுஞ் சரீரமெல்
லாஞ்சிறைபட்டுநின்றவெல்லாரும் வெருவிக்கூப்பிட் டலறி
நோம்படி யிருளாற்சிறைபட்ட வந்நாடு பாவத்திற்குச்சி
றையாகிய நரகத்தின்றன்மையாய்த் தோன்றிற்றென்க. (௩௭)

வேறு.

அங்கடைக்கலமாயடைந்தவராளென் றுக்கியகொடும்
வினைமாறுப் [பரமன்
பங்கடைகொடியவேந்தனைத்தணிப்பப் படியுளவேத்தரா

வெங்கறைநீகமுண்ணிசளிக்கள் விலங்கினேய்குட்டநோயா
வி [ப்துவே.
சுங்கடைபதங்கமல்கிருளென்னுஞ் சபித்ததோர்சாடமொன்

உரை. — எசித்துதேசத்தி லடைக்கலமாகவந்தபூதனை யடி
மைபாக்கிய தீவினைமாருத கொடியவரசனுடைய வாங்கா
ரத்தைத்தாழ்த்தும்படி பூவுலகின்ரசரெல்லாரையுமாளாநிற்கு
ம்பரமநாத னவனைச்சபித் திட்டசாபங்களென்பதாவன: இ
ரத்தந் தவனை யுண்ணி யீ விலங்கின்நோய் குட்டநோ யால
ங்கட்டி விட்டில் இரு ளிவையொன்பதென்க. (௩௮)

கான்முகம்புதைத்தகண்மலர்நாட்டிற் கலக்கமுற்றிட
த்தொழுமியாரும் [மற்றிபூதர்
வான்முகம்புதைத்தமுகின்முழக்கெஞ்ச மயங்கியார்த்தலற
தேன்முதம்புதைத்தமலரெனவங்கோர் சிதைவிலவாழ்தலைக்
கண்டே [ன்பான்.
பூன்முகம்புதைத்தவேலரசஞ்சி யொருங்ககன்றேகுமினெ

உரை. —வாசமதுவைப்பொழிந்த மல்லைப்பூத்த வந்நா
ட்டிலெங்கு மெல்லாரும் வானத்தின்மேகங்கள் முழங்கின
வோசையைமறைக்கும்படி மயங்கிமுழங்கியலறுநிற்க பூத
ரோவென்னி லதிலேதேனூடிமலர்ந்தபூப்போல வொரு
கேடுமின்றிவாழாநிற்பதுகண்டு ஆத்தைசொரிதற்குக்காரண
மான வேலையேந்தியகொடியவரச னஞ்சி யெல்லாருமொரு
ப்பட்டுப்போவீர்களாகவென்பானென்க. (௩௯)

என்பதும்வீரமோயிசன்றன்கை யெடுத்திடர்தீர்ப்பது
மொன்றுய்த் [றமையா
துன்பதுநீங்கவரசுளத்திகன்று தொழும்பராய்நின்மினென்
லொன்பதுசாபநிரைநிரைதுடர வுவமியாமதுகையோனிட்ட
பின்பதுகணியாறேவெனச்சினந்து பெயர்ப்பருமிடுக்கனு
யித்திட்டான்.

உரை. — போங்களென்று மன்னன்சொன்னவளவிலே
மோயிசன்றன்கையையெடுத்தோங்க வந்த துன்பமு நீங்கு
ம், நீங்கியவளவிலே மீளவுமரசன்பகைத்தடிமைகளாக நில்

னுங்கொன்றவனை நிறுத்துவாரென்றதனுஞ் சொன்னவெட்
டுங்கோ டொன்பதுசாபமு மொன்றின்பின்பொன்றை நீக
ரதவல்லமையுடையநாத னந்நாட்டிநீகிட்டபின்ன ரிதுவி
மென்ருகிருப்பானோவென் றுசினந்து பெரியதோராக்கி
னையிட்டானெனக (சஎ)

கண்முழுகட்டவிருளிராநடுவிற் கதக்களவருந்திற லி
க்க [னொடிபொழுதின்
விண்முழுதன்றிமண்முழுதிறைஞ்சும் வேந்தர்வேந்தனை
மண்முழுதாண்டகோன்றலைமகனு மற்றவர்தலைமகர்யாரு
மெண்முழுதின்றியிறந்துயிர்செகுப் வெசித்துநாடெங்க
ணுங்கொன்றான்.

உரை.— ஆண்டவனெசித்தார்க்குச் சினந்திட்ட பத்தா
ஞ்சாபமேதென்னி விருண்டவிராவினடுவிலே கோபத்தின
னாயாக வல்லமையுடைய வானு மண்ணும் வணங்கு மரசர்
க்கரசனாகியகர்த்தா வோரரைநாடிநேரத்தி லந்நாட்டைத்த
னியாண்டகொடியவரசனது தலைமகனு மற்றவர்தலைமக்களு
மெல்லாருமட்டின்றி யிறந்துகிடக்கும்படி யெசித்துநாட்டி
லெங்குங்கொன்றானெனக. (சக)

ஒல்லெனவுளைந்துகண்புதைத்தலறி யுடன்றலிக்கடவு
ளோடெதிர்ப்ப [னவுளத்தஞ்சி
வல்லெனவெவரோமற்றெமையொருங்கு மடிப்பனோவெ
னல்லெனவெண்ணுதரசன்மோயிசனை யழைத்துமரிக்கணத்
தெழுகச் [தொருங்ககன்றூர்
சொல்லெனவுரைப்பவனைவருமுவந்து துணுக்கெனவெழுந்

உரை.— அதைக்கண்டெல்லாரு மொல்லெனவலறிக் கண்
ணைப்புதைத்தழுது இத்தன்மைத்தாகிய கடவுள்கோபித்தால
வனோடெதிர்க்கும்படி வல்லவனாரோ வினிநம்மையெல்லா
மையுமிங்ஙனேகொல்வானோவென் றழுதஞ்சி நடுச்சாமமெ
ன்றுபாராம லந்நேரத் திராச மோயிசனையழைப்பித் து
ன்னினத்தாரெல்லாரு மித்தக்கணத்திலே தாமதமொன் றுமி
ன்றிப்போகச் சொல்வாயாகவென்றவையா லவரெல்லாருமு
வந்து சீக்கிரமா யகன்றுபோனாரெனக. (சஉ)

இற்றியாவையுமிவ்விளவரசன்காட்டி யெசித்திடைச்சி
தறியவெருவின் [ளோருர்
வெற்றியாலிபூதர்தஞ்சிறைதீர்த்து மிடைந்தனதெரிவையரி
ழுற்றியாங்கிழவரிவரலதரும்போர் முரண்படமலைப்புயவீர
ப் [றே.
பெற்றியாரறுநூறுயிரர்கடக்சேர் பெருஞ்சுரத்தேகினரான்

உரை.—இவையெல்லா நீங்கள்கையிலேலத்திய வித்திருக்கு மாரன்றனேசெய்துகாட்டி யெசித்துநாட்டிலெங்குஞ்சித றின வெருவினாற் கொண்டவெற்றியினு லியூதர்பட்ட சிறை யைமீட்டான், அங்ஙனமன்று மாதர்களுஞ்சிறுபிள்ளைகளுங் கிழவமாருமன்றிப் போர்பொருதற்கேற்ற மலையினொத்தபு யங்களையுடையவீரரே யாறுநூறுயிராங்குறையாமற்கடலைநோ க்குஞ்சுரத்துவழியாகப்போனாரென்க. (சங)

விண்ணுகவார்த்துவீழுருமன்ன வேந்துமீண்டுலம்பி
யையென்னப் [யுஞ்செந்தீக்
பண்ணுகபசும்பொற்கொடிஞ்சியந்தேரும் பண்ணுகபுரவி
கண்ணுகபடுமாமதகரிமாவுங் கடிந்தனர்தகைப்பனென்றயி
ல்கொண் [றத்துடர்ந்தான்.
டெண்ணுகவிடமற்றபயர்மாகடல்சூழ்ந் தெய்தகோல்பின்னு

உரை.— யூதர்போனபின்பு மீளவுமவ்வரசன் மேகத்தினி ன்று முழங்கிவிழுமிடிபோலவார்த்துப் பொருக்கெனத்தேர் களுங்குதிரைகளும் யானைகளும்பண்ணுகவென்றுபோனயூ தரைத்தடுப்பேனென்று தாமெனவெண்ணப்படாதவீரர்கடல் சூழவரவெய்தவம்பினுங்கடிதாய் முடுகித்துடர்ந்தானென் க. (சச)

நோக்கியநோக்கந்திசைத்தொறுந்தீக்க றாக்கருஞ்
செருக்கொடுநோக்கித்
தாக்கியதாக்கினுடன்றளர்ந்தாக்கச் சலத்தடுமடங்கலேறன்ன
ளீக்கியபாக்கத்தகல்வரைத்தாக்க நெருங்கியகானெடுமறை
யை [யின்வல்லோன்.
யாக்கியபடத்திலார்த்தகார்முகில்விட் டடைத்தனன்மனுகை

உரை. — திசையெல்லாந் தீப்பற்றிவேதற்குக்காரணமா ம்படி மாருதவாங்காரத்துடனேநோக்கிப் பாய்ந்தபுலியினு ங்கொடிதாய்ச்சினந்து தாக்கும்படி கொல்லுஞ்சிங்கத்தி னேனொப்பான் றன்னகனை நீக்கி யகன்றபூதனைநெருங்கிவரு கையி விருபடைக்குநடுவிலே மறைவாக விரித்ததிரைச்சீலை போல விடிக்குங்கரியமேகத்தைவிட்டு வழியடைத்தானவி றந்தவல்லமையுடைய நாதனென்க. (௪௫)

இப்படைதுடரப்புணரிமுன்னெருங்க விடைவரும்பூ
தருள்வெருவ [சுவர்க
வப்படைகடலைமோயிசன்பிரம்பா லடித்தவிற்பனிக்கொளிச்
னொப்படையலைகள்பிரிந்தகன்றிருபா லுயர்ந்துநின்றிடத்
திவர்புக்கு [போனார்.
வெப்படையரசனுளத்துடன்றலம்ப விருப்புடனிபூதர்கள்

உரை.— மாற்றாரிபடை பின்றொடரவுங் கடலேமுன்னெ ருங்கவு நடுவேநின்றபூத ருள்ளேவெருவாநிற்ப மோயிசன்ற ன்பிரம்பாற் கடலையடித்தான், அடித்தவளவிலே யலைகள்பிரி ந்து பனிக்குச்சுவராகவிருபக்கத்துயர்ந்துநிற்ப பூதர் நடுவே கடல்விட்டவழியேபுகுந்து கொடியமன்னனிதைக்கண்டு ம னதிலேவெந்து சினந்துமுழங்காநிற்ப பூதரெல்லாருங் களி கூர்ந்துபோனாரென்க. (௪௬)

மறங்கொடுகேதஞ்சால்மருட்டியமனத்தில் வருஞ்சிதை
வுணர்கிலாக்கொடியோ [ம்
னறங்கொடுபுக்கபூதனைத்தடுப்ப வையெனத்தானையுந்தானு
புறங்கொடுபிரிந்தபுணரிசெய்வழியே புக்குறிக்கடனடுவ
டைந்தான் [ரோ.
திறங்கொடுசினமூமாசையும்பெருகச் சேரிழிவறிகுவரெவ

உரை.—மறமுங்கதமு மிகுந்தமையான் மயக்கத்தைக்கொ ண்டமனதிலே வருங்கேடறியாதகொடியவரச னல்லறத்தின் றுணையாற்கடலுட்புகுந்த பூதரைமறிக்கும்படி சீக்கிரமாய்த் தானுந் தன்படையும் பிரிந்தகடல்செய்தவழியேபுகுந்து ந டுக்கடலிலேசேர்ந்தான், வல்லமையுடையார்க்குக் கோபமு

மர்ளையு மிருங்காலத்துத் தமக்குவருங்கேடுகளை யவர்களுள் ளறிவாரில்லையென்க. (௪௭)

வேறு

நெடுமாகடனிகர்மாபடை யுறுமாகடனெறியே
நடுமாகடலடைகாலையி னமையாள்பவனில்சொல்
லொடுமாகடல்மிசைவானவ னுருவாயினவொருவன்
வடுமாகடலெனுதானையை மதியாவதைவகுத்தான்.

உரை.—கடலொத்தவப்படை கடல்வழிவந்து நடுக்கடலி லேசேர்ந்தபோது நம்மையாளுஞ் சுவாமிகட்டளையினுற் க டல்மே லுருபியாய்நின்ற வொருவானவன் கசடெல்லாமடங் கக்கொண்ட கடலாகிய மாற்றார்படையைச் சங்கரித்தானெ ன்க. (௪௮)

உரமற்றனர்கவசத்தொடு முறமற்றனவுழவர்
சரமற்றனர்தருகத்தொடு சமமற்றனசமிதக்
கரமற்றனர்கருவிக்கொடு கழலற்றனர்கவிழச்
சிரமற்றனர்படைவிட்டெதிர் செருவுற்றனர்தெரியார்.

உரை.—நிகரில்லாத படைவீரர்கவசத்தோடு நெஞ்சினையு ம் வில்லோடுவெம்புகளையும் பிடித்தவாயுதத்தோடுநிகரின்றிப் பொருதகையையுங் கால்களையுங்கவிழ்ந்துவிழும்படி தலைகளை யுமிழந்துவெட்டுண்டுபோ யெதிர்த்துத் தம்மேற் படையை விட்டுச் சண்டைகொடுத்தவரா ரென்று தெரியாதிருந்தாரெ ன்க. (௪௯)

கோலில்லனபுதையோடுள குதையில்லனகொடிய
வேலில்லனவளைபோடிரு மழுவில்லனவிரிநீண்
டோலில்லனவசியோடுயர் கதையில்லனசுளிவிற்
காலில்லனவடமோடொரு கடையில்லெனமடிவார்.

உரை.—கைப்பிடித்தவம்புகளுந் தூணியோடிருள்ள வம்புகளும் வேலுஞ்சக்கரமும் பெரியமழுவு நீண்டகேடக மும் வாளுந் தண்டாயுதமு தூணியோடுகோபித்தவில்லின்கா

லு மிவையெல்லாமில்லாதபடி முறிந்து மட்டின்றிச் சாவா ரென்க. (௪௰)

உருள்பூட்டியநெடுமேச்சில வருள்காலிலவுகளி
மருள்பூட்டியபரிமாவில வருபாகருமிலமேற்
பொருள்பூட்டியவுயர்கூம்பில பொலிநீள்கொடியிலபொற்
றெருள்பூட்டியவிரிபாரில சிதைதேர்பலபலவே.

உரை.—சிலதேருக்கச்சின்றிச் சிலதேருக்குருளையின்றிச் சிலதேருக்குப்பூட்டிய குதித்துமருளிப்பாயுங் குதிரைகளின்றிச் சிலதேருக்குப்பாகரின்றிச் சிலதேருக்குப்பொற்கொடிஞ்சியின்றிச் சிலதேருக்குயரக்கட்டின நீண்டகொடியின்றிச் சிலதேருக்குப் பொற்பாரப்பின்றி யிங்ஙனம்பற்பலதேர்கள்முறிந்துகிடந்தனவென்க. (௪௧)

பிரிவார்தமிளைரிவார்கறை பிளிர்வார்வதைபெறுவார்
முரிவாரலைபுகுவாருள முனிவார்துயர்முதிர்வா
ரொரிவாருடல்கரிவாரிறந் திழிவாரிடையிடையே
யொருவாளியெய்பருவாயின வொருவானவனுரனால்.

உரை.—அருபியாய்நின்ற வொருவானவ னொரம்பினையெய்தவல்லமையினாலப்பகைவர்தம்முட்பிரிந்தெரிந்து இரத்தத்தைச்சிந்திப் பலரோசாவார், பலர்முரிந்துபக்கத்துநின்றவி நின்றகடலினலைபுட்புகுந்துசாவார், பலர்சினந்துவருந்திபெரிந்துகரிந்து அங்கங்கேசாவாரென்க. (௪௨)

வலமாயினுமிடமாயினும் வருவாளிகளளவுண்
டிலதாயினு மவ்வாளிகள் படுமல்லதுமிலையால்
பலவாளியி லொருவாளியும் பதிப்பாரிலதுயிருண்
டலதாயிருணுமோர்சர மலதெல்லையுமிலையே.

உரை.— வலத்திலுமிடத்திலும்வந்துவிழு மத்திரங்கள்மட்டளவின்றியாயினு மவற்றுள்படுஞ்சரமன்றிப் படாததில்லை, பட்டவம்புகளுடனேகொல்லு மதனுற்றனக்குப்பட்டவம்பைப் பதிப்பாரில்லை, மீளுவுமொவ்வொருசர மாறுயிரையுண்ணு மிழிலேயுமுடிவில்லையென்க. (௪௩)

அழலக்குயவழலக்கரி யழலப்பரியயிலோ
டழலக்கதையழலத்தனு வழலச்சரமசியோ
டழலக்கிடுகழலப்புதை யழலப்படையெவையு
மழலக்குடையழலக்கொடி யழலத்திரம்விடவே.

உரை.— அவ்வானவ ரோக்கினிபாணமெய்ததனாற் றே ருமியானையுங் குதிரையும் வேலுந் தண்டாயுதமும் வில்லு மம்பும் வாளுங் கேடகமுந் தூணியு மற்றவாயுதங்களுங் குடைகளுங் கொடிகளுமழன்று வெந்தனவென்க. (௫௪)

அழிதாரொடுகடலாழியி னடிவீழ்வனவுயர்தே
ரொழிபாயொடுகவிழ்கின்றன வுருவொத்தனமதமே
கழிமால்கரிகழறிக்குளிர் கடலுட்புகல்கதிரோ
னெழில்வானுறவலைபுக்கன விருளொத்தனவெனவே.

உரை. — மேற்கொடியழிந்து கடலில்விழுந்தேர்கள் விரித்தபாயழிந்துகவிழ்ந்துவிழுங் கப்பல்கள்போலத்தோன்றின, மதயானைகளலறிக்கடலிலேபுகுவது சூரியன்வானத்திலெழுந்துவருகையிற் கடலிலேபுகுந்தவிருளைப்போலத் தோன்றினவென்க. (௫௫)

முடிவாளுறுமிரதத்தவர் சிரமற்றுகுமுடிகள்
வடிவாளியொடுரமற்றுகும் வடிவுற்றணிமணிக
ளடியோடிருகரமற்றுகு மழகுற்றவிரணிகள்
கடிதாயுலகொழிநாளுகு கணமொத்தனவெனவே.

உரை.— வாட்மேலுயர்ந்த தேரினின்றவரசர் தலைவெட்டுண்டு சூழ்ந்தமுடிகள்விழவு மார்பறுந்துபோ யணிந்தபல மணிகள்விழவுங் காலுங்கையுமற்றுப்போ யதிலேபுனைந்த வாபரணங்கள்விழவு முலகமுடியுங்காலத்து வானினின்று விழும் விண்மீன்கள்போலத் தோன்றுமென்க. (௫௬)

காராரொலிகடலாரொலி தரையாரொலிகடிதூர்
தேராரொலிகரியாரொலி பரியாரொலிசிதறும்

போரரொலிமுரசாரொலி புகைவாரொலிபுனைசெய்
தேரரொலிமடிவாரொலி நிறைபாரொலிநிகரா.

உரை.—மேலேமேகங்களும் பக்கத்துக்கடலு நடுவேயூர்திகளு மியானைகளுங் குதிரைகளு முரசுபறைகளு முழக்கத்தோடுகூடிய சிதைவாரொலியுங் கோபிப்பாரொலியுஞ் சாவாரொலியு மிவையெல்லாங்கூடிமயங்கிப் பாவிகளானபகைஞரிடத்துக்கிளம்பின முழக்கத்துக் கிவ்வுலகி னிகரில்லையென்க. (௫௭)

மாறுமதகரிபட்டன வனைபட்டனவயமா
வேறுயுருளழிபட்டன வழிபட்டனமிளிர்தேர்
கூறுயுடல்குறைபட்டன குறைபட்டனகுருதி
யாறுபலகிழிபட்டென வதிர்பட்டுறுமகடே.

உரை.—மதயானைகளுங் குதிரைகளும்பட்டன, உருளைகள்வேறுபட்டுத்தேர்களுமழிந்தன, கூறுகூறுயுடல்கள் துண்டித்தனஞ விரத்தமாறுகவோடிப் பக்கத்துநின்ற கடல்கிழியடும்படி யதிர்ந்துள்ளேகலந்ததென்க. (௫௮)

செப்பாரிலதடறுனைக டாள்மாள்தலிமிரஞந்
துப்பாறெனவுதிரத்திரா துடராழியின்விரவ
வப்பாறிவழிசேப்பவி னதுசெங்கடலெனவே
யொப்பாரிலகதையாவரு முணரப்பினறுளைத்தார்.

உரை.—சொல்லுந்தன்மைத்தன்றி வல்ல தானைகளின்றிரள்மடிந்திறத்தலாற் சிவந்தாறுகத் திரண்டோடுமிரத்தங் கடலோடுகலந்தவளவிலே தெளிந்தகடலுஞ்சிவந்ததனு லக்கடல்செங்கடலென்று நிகரின்றி யன்றுநடந்தசரிதை யெவருமறியும்படி பெயரிட்டித்நாளு மப்பெயர்வழங்காநிற்குமென்க. (௫௯)

நானேறுளதிசையெங்கணு நாறுபடைநணுக
மேனேறுளமுகிலின்றுளி மேனேர்கணைவிழுகக்
கானேறுளபடைகண்டிலர் காணார்விடுகரமும்
மானேறுளமழிவஞ்சிகர் மாறுதுளமருள்வார்.

உரை.— நாற்றிசையெங்கும் பலவகையாயுதங்கள் தம் மேனெருங்கவு மழையின்றுளியினுமடர்ந்த வம்புகள் தம் மேல்விழவு முயிரையுண்ணுங்கூற்றனையொத்த கொடியபடைகள்விழும்போ தவற்றைக்காணாமது மவற்றையெய்தகையைக்காணாமது மான்கூட்டம்போலே மனத்திலஞ்சி யழியும் வஞ்சகர் நிகரொன்றின்றி மயங்காநிற்பாரென்க. (௬௰)

முன்னேரினர்பின்னேரினர் புடைநேரினர்முகிலி
னன்னேரினரின்னேரின ரன்னேரின ரலமே
லென்னேரினரென்னேரின ரென்றேயவரெணிலுங் [ர்.
கொன்னேபடைகொண்டாருயிர் கொன்றான்கரங்குறிப்பா

உரை. — இங்ஙனமயக்கமாதலா லேதோநம்மைச்சிதைத்துக்கொல்பவர் முன்னேநிற்பாரென்பார், பின்னேநிற்பாரென்பார், பக்கத்துநிற்பாரென்பார், மேகத்துநேர் மேனிற்பாரென்பார், இங்கேநிற்பாரங்கேநிற்பாரென்பார், கடலின்மேலெமக்குநேர்நிற்பாரென்பார், இவரல்லவெமக்குநேர்நிற்பாரென்பா ரவரொன்றாலும் வீணாய்ப்படைகளைவிட்டுத் தம்மைக்கொல்லுங் கையைக்குறிப்பாரென்க. (௬௧)

கட்டேற்றெழுகன்றூற்றிய கதமுற்றியகயவ
ருட்டேற்றெழுபகையொத்தன வுறவிட்டிசையுயர்நேர்
பட்டேற்றெழுமுகிலொத்தெழு பகழித்திரள்விடுவார்
விட்டேற்றெழுசரம்விட்டனர் மிசைபட்டுருவிடுமால்.

உரை. — தம்மைக்கொல்வா ரங்கேயுள்ளாரென்றுகாணாமையாற் கண்வழிநெருப்புப்பொங்கிவிடுங் கோபமிகுதியா லப்பாவிக ளுள்ளேகொண்ட நிறைந்தபகையின்விசையோடு போம்படி யாகாயத்தினேராக வெழும்பினமேகம்போலத் திரளாயம்புகளையெய்வார், எய்தவம்புகளோவென்னில் மேற்பறந்துபோ யெய்தவர் மேலேமீளவும்விழுந்து பட்டுருவியவரைக்கொல்லுமென்க. (௬௨)

அண்டத்துயருலகாளிறை யவனோடெவர்பொருவார்
அண்டத்துயர்வலியற்றன னெனமற்றவர்மதமா

கண்டத்துயர்பொலிவேத்தொடு கடிதோடியகடையிற்
சண்டத்துயர்களைபூதர்கள் தனியுற்றனரொருங்கே

உரை.—மடிந்தாரொழிய நின்றமற்றவரெல்லாங்கண்டு வாளுலகில் வீற்றிருந்தாருங்கடவுளோடு போர்செய்ய வல்லவரார்? நாமிக்கதுன்பங்களையடைந்துபெலனழிந்துகெட்டோமேயென்று தாமுமதயானைமேனின்றவரசனுஞ் சீக்கிரமாய்ப் புறங்கொடுத்தோடினார், ஓடத்துடங்கினபொழுதே விரைந்துமுன்னேபோனபூதரெல்லாரு மறுகரையேறினரென்க. (௬௩)

வேறு

குளமேவிவர்சென்றனரொன்று கதத்திறையோன்கடற்
றிரைமேலடற்குரலைநீட் டெனநீட்டியசீர்திரண்ட [றெண்
வரைமேல்வரைவீழ்ந்தெனவாங்கலைவீழ்ந்தவர்மேற்கவிழ்ந்து
குளமேலெழவுட்குளித்தாழ்ந்து கொடும்பகைவர்மடிந்தார்.

உரை.—பூதரெல்லாருங் குளமேற்சென்றவளவிலே சினத்தைக்கொண்டநாதன் கடலின்மேற் பிரம்பினை நீட்டுவாயாகவென்றுகட்டளையிட்டமையால் மோயிசனதைநீட்டினவுடனே திரண்டமலையின்மேலே மலைவிழுந்தாற்போல விருபக்கத்துச்சுவராய்நின்றவலைகள் விழுந்து ஓடினபகைவர்மிசையேகவிழ்ந்து மேலேநுரைதிரளாவெழும்படி யுள்ளேயவரெல்லாருமமிழ்ந்தியிறந்தாரென்க. (௬௪)

குடைநாள்கடலீர்குடைந்து கழறிப்பொங்குங்கதம்போ
லுடைமால்கரிகள்பரிக ளுருடேருழவருளமற்
படைநால்வகையுங்குடையப் படமேற்படக்கீழ்படவே
புடைவாங்கலைபோடலையப் பொலியார்ப்புலகிற்பொருவா.

உரை.—உலகமுடியுங் கடையுகத்திலே கடல்குடைந்து முழங்கிப்பொங்குந்தன்மைத்து மதயானைகளும் புரவிகளுந் ...ர்களும் படைவீரருமிந்நால்வகைப்படைகளுங் குடையபட்டு மேலுங்கீழுமாகத்திமாவி யிருபக்கத்துவிழுந்து க

விழ்ந்தவலைகளோடலைப்பட்டபொழு தெழுந்தமுழக்கத்தி
ற் கிவ்வுலகி னிகரில்லையென்க. (௬௫)

ஓராயிரமால்கரிமா வோராயிர நூறயமா
வீராயிரமோரெழுநூ றருடேரொறி தும்பியவே
லாராயினபற்கோடி யமிழ்ந்தி நிலைமைப்பிலனைத்தும்
பேராயின நீர்வலையிட்ட பிராணிறைவாரினனால்.

உரை.—அங்ஙனமாயிரம்யானையு நூறாயிரங்குதிரைகளுமீ
ராயிரத்தெழுநூறுதேரு மக்கினிபுறப்படவிட்ட வேலுடை
ய வீரர்பலகோடிகளு மொருகணத்தில்மிழ்ந்திப்போ யந்த
னையெல்லாவற்றையுங் கடவினலைகளைப் பெரியவலையாகவிட்
டநாத னொருப்படவாரிக்கொண்டானென்க. (௬௬)

போர்மீதேந்தும்புரவி கரிதேர்பொருநர்பொருவாச்
சீர்மீதேந்துஞ்செருக்குற் றவையுந்தெளியாநெஞ்சி
னோர்மீதேந்துந்திறன்கொ ணிமலற்கஞ்சாக்கொடுங்கோ
னோர்மீதேந்தும்படையோடிமைப்பிற்சிதைந்தானழிந்தான்

உரை.— போர்க்களங்களைக்கடந்து மிக்கவெற்றியாலேந்
திய குதிரைகளும் யானைகளுந் தேர்களும் படைத்தலைவருநிக
ரதவல்லமையென்றெண்ணினதனு லாங்காரத்தைக்கொண்
டெந்தானுந்தெளியாதநெஞ்சினு லுவமியாமலுயர்ந்த வள
விறந்த திறத்தையுடைய நாதனுக்குஞ் சற்றுமஞ்சாதிருந்த
கொடியமன்னன் றன்னுயர்ந்தபடையோடு நாலுங்கூடவொ
ருகண்ணிமைத்தவளவிலே கெட்டழிந்தொழிந்தானென்க.
(௬௭)

கரைமேனின்றார்கொடிஞ்சி கழிதேர்த்திரள்பற்றீவின்
புரைமேனமிதக்கவாமைப் புரையிற்கிடுகுமிதக்கக்
குன்றமேலெழும்போற்குடைவெண் கொடிவெண்கவரிமிக்கத்
திரைமேன்மகரத்திரள்போற் செருமாமிதக்கக்காண்பார்.

உரை.—அப்பொழுதுகரைமேல்நின்றவர்கள் கொடிஞ்சியி
ல்லாத விரதங்கள் தீவுகளைப்போலத்தோன்றிமிதக்கவுங் கே
டகங்களாமைகள்போலமிதக்கவுங் குடைகளுங்கொடிகளும்

வெண்சாமரைகளு நுரையைப்போல மிதக்கவு மதயானைகளு
ங் குதிரைகளு மகரமீன்களைப்போல மிதக்கவுங் காண்பா
ரென்க. (௬௮)

அல்லின்வண்ணத் துடலோ ரணியாய்த்திரண்டுபிரியா
தெல்லின்வண்ணத்தெரிவா டனைராதினைத்துதிரிய [மேய்
வில்லின்வண்ணத்தொளிர்தெண்டிரைமேன் மிளிர்மின்னொடு
செல்லின்வண்ணத்தெவனுந் திரண்டுமிதக்கக்காண்பார்.

உரை.—இராப்போலக் கரியவுடலையுடைய பகைவர் கூட்
டங்கூட்டமாய்த்திரண் டொருவனொருவனைக்கட்டிக்கொ
ண்டு பிரியாமலுங் கதிரைவிட்டெரியுங் கைப்பிடித்தவாளைவி
டாமலுங் கூடித்திரிந்து விளங்கியகடலின்மேலெமின்னிக்
கொண்டு மேய்ந்துதிரியுமேகங்களைப்போல வெங்குந்திரளா
ய் மிதக்கக்காண்பாரென்க. (௬௯)

மிகப்பட்டுயர்வல்லிறையோன் விறலாற்கரைசேர்ந்தவ
ரோ
நகப்பட்டொருங்கெதவைபட் டுடன்றநண்ணார்கடலுள்
ளகப்பட்டமிழ்ந்தியலைமேன் மிதக்கவனைத்துங்கண்டே
புகப்பட்டழுக்குமினையின் பொலிசைகாண்மினென்பார்.

உரை.— மிக்கவல்லமையுடையநாதன் றிறத்தினாற் கரை
மேற்சேர்ந்தநுகரோ நகைக்கப்பட்டுப் பாவவினையா னிறை
ந்த தம்பகைவர்கடலினுள்ளகப்பட்டமிழ்ந்தி யவர்படையெ
ல்லாஞ்சிதைந்து திரைகளின்மேன் மிதக்கக்கண்டு இதோ
வொருவன் மனத்திற்புகுந்தவினை யவனையழித்துக்கொடுக்கு
ம்பயனிது காண்மினென்பாரென்க. (௭௰)

பரியேகாவாவுயிரைப் பருகியூன்பெய்மருப்பிற்
கரியேகாவாவளிமுற் கடிதாரிரதங்காவா
வெரிவேல்காவாவெவையுங்காவா விறையோனருளிற்
புரிவேகாவாதனகால் புரையின்வினைவிதென்பார்.

உரை.— குதிரைப்படையு முயிர்களையுண்டு குருதிகளையு
மிழ்ந்தகொம்பையுடையயானைகளுங் காற்றினுங்கடிதாயோ

டியவிரதங்களும் படைவீரரு மற்றெவையுங் காக்கமாட்டா
தே யாண்டவன்றனையைப்புரிந்து தானன்போகோவானுயி
ருதலாலவனுதரவில்லாதபடி காரணமரணபரவந்தரும் வினை
விதுதானென்பானென்க. (எக)

நல்லவிலதேலமுதே நஞ்சாநஞ்சேயமுதா
மல்லவிலதேல்வினையே யமர்செய்துதைப்பநிற்பா
ரில்லவிலதேல்வினையே யிகல்செய்தவரைக்கெடுக்க
வல்லவிலதேயென்பார் வரையாத்தொழுதுமகிழ்வார்.

உரை. — நல்வினையில்லாதாயி னமிழ்துண்டாலு நஞ்சா
மே, தீவினையில்லாதாயி னஞ்சினையுண்டாலு மமிர்தமதா
மே, ஒருவனுக்குத்தன்றீவினை போர்செய்துதைத்தத
ன்றுங்காலத்து நிற்பாரில்லை, அவ்வினையில்லாதவரைப்பகைத்
தாலு மவரைக்கெடுக்கவல்லதொன்றில்லையென்பாரளவுமின்
றி நாதனைத்தொழுதுமகிழ்வாரென்க. (எஉ)

சொல்வாய்தவிரச்சிறைதீர் றுநரவந்தப்புறம்போ
யெல்வாய்முகிலுமல்வா யெரித்தானுருவுமிவர்முன்
செல்வாயவர்செந்நெறிவாய் திளைத்தபாலைத்திணைவா
யொல்வாயழனுமாற்று துணுநீரின்றியுளைந்தார்.

உரை. — இங்ஙனஞ் சொல்லின்றன்மை கடந்தமுறை
யோடு சிறைதீர்ந்தருநர்களிகூர்ந்தப்புறம்போய்ப் பகலிலே
யொருமேகமு மிராவிலேயோரக்கினித்தூணு முன்னேவ
ழியைக்காட்டத் தாம்பின்சென்றுபோ யழன்றபாலைநிலத்தி
ற்சேரும்போ தெழும்பியவழலையும்பொறுக்கமாட்டாம லு
ண்பதற்கு நீருமில்லாமல் மிகவும்வருந்தினாரென்க. (எ௩)

தொடையேநின்றதலையு நீதித்தொகையும்பிரியா
மிடையேநின்றவிறையோன் பணிப்பவேத்திரத்தாற்
புடையேநின்றகல்லைப்புடைப்பப் புனல்பாய்ந்தக்கல்
லிடையேநின்றூடர விண்டெண்ணிலர்சால்புண்டார்.

உரை. — தொடர்ந்தமாலையாகத் தலையு நீதியும்பிரியாம
லிறையைக்கொண்டார்தன்கட்டளையைச்செய்ய மோயிசன்

முற்சொன்னபிரம்பினாற் பக்கத்துநின்றகல்லை யடித்தவளவி
லே யக்கல்லினின் றண்ணீர்ப்புனல்புறப்பட்டுப் பாய்ந்தோ
டி யவரப்பாற்பெயர்ந்துபோகையி லக்கல்லும் பக்கத்துத்து
டர்ந்துவர நீரில்லாதவிடமெல்லாங் குறைவின்றி மட்டில்லா
தசனங்களே யினிதாயுண்டாரென்க. (௭௪)

அவ்வாறொருகுருளைக்கொண் டவையாவையுஞ்செய்தே
யிவ்வாறிளவலென்ன வொளித்தந்நாடேகுகின்றான் [வனோ
செவ்வாறுளத்தோன்பயந்தத் திசைதேடுவனோவென்றோ
வொவ்வாவெசித்தாருணர்வாரெனவீட்டுரைத்தான்வானோன்.

உரை. — சொன்னதன்மையா லவற்றையெல்லாஞ்செய்த
வனாரோவென்னி லிவ்வழியாக விளவலாயொளித்தாற்போல
வவ்வெசித்துநாட்டிற்குப்போகிற திருக்குமாரன்றானே யிவ
ன்பயந்தங்கேபோகிறானோவில்லையோவென்று நன்றாயெசித்
தார்தாமேயறிவாரென்றான் மிக்கமேல்மீளவுமிவற்றைச்சொ
ன்னானென்க. (௭௫)

வேறு.

கடலுடையுலகெலாங் கலங்கவின்னவை
யிடலுடைவலியொடு விளங்கச்செய்தவ
னுடலுடையிளவலா யொளித்தபான்மையா
லடலுடையருளுணர் வமைந்துளானரோ.

உரை. — கடலையுடைத்தபூவுலகெல்லா முற்சொன்னதைக்
கேட்டஞ்சிக்கலங்கும்படி யிவற்றையெல்லா மளவிறந்தவல்
லமையோடுசெய்தநாதன்றானே மனிதனா யுடலைக்கொண்டு
குழந்தையாய்த்தோன்றி யொளித்துப்போகிறவனைப்போல
ப்போ யளவிறந்த வனுக்கிரகத்தைச்செய்யும்படி நினைத்
தானென்க. (௭௬)

தீய்வினைசெய்தபோ தெசித்துச்சீர்கெட
நோய்வினைசெய்தன னுனித்தந்நாடர்தாந்
தாய்வினைசெய்துமுன் சகோபுகாத்தலாற்
போய்வினையறுத்தருள் *பொறியாவுள்ளினான்.

உரை.—முற்சொன்னபடி யெசித்தார் கொடுமையோடு தீவினைசெய்தகாலத் தவர்செல்வமெல்லாங்கெடும்படி பல வருத்தங்களைச்செய்ததாதன்றானே யதற்குமுன்குணத்தோ டவ்வெசித்தார்தாமே தாயைப்போலச் சகோவென்பவனைப் பேணினுரென்றதனுற் றானே யிப்பொழுதங்கேபோய்த் தீவினைகளையறத் தருளைச்செய்யும்படி நினைத்தானென்க. (எஎ)

விண்டுளியிலாமையால் வியன்றபார்மிசை
பண்டுளியனைத்திலும் பசிபரந்துயி
ருண்டுளிசகோபுதன் ஹுயர்குலத்தொடு
மண்டுளியெசித்தன ரருள்செய்தாரரோ.

உரை.—மழைத்துளியொன்றின்றிப் பூருவத்திலகன்றபூவுலகிலெங்கும் பசிபரந்துயிர்களையுண்ணும்போது சகோவென்பவன் றன்குலத்தோடங்கேபோ யண்டினவளவிலே யெசித்தா ரவர்க்கு மிக்கவாதரவைச்செய்தாரென்க. (எஅ)

வேதமொன்றறிந்திலார் வேதங்கொள்குலங்
கேதமொன்றியதெனக் கிளர்ந்தவன்பொடு
மேதமொன்றிலவள ரகவுள்ளிட்டனர்
பேதமொன்றிலநயன் பெருகவீட்டினார்.

உரை.—எசித்தார்தாம் வேதத்தையறியாதவராயினும் வேதத்தையநுசரித்த சகோவென்பவனதுகுலத்துக்குத் துன்பம்வந்ததென்றிரக்கம்புரிந்து குறையின்றி விளையுமொருநாட்டையுந்தந்து வேறுபாடின்றித் தம்மோடொத்ததா யெல்லா நன்மையுந்திரளாய்க்கொடுத்தாரென்க. (எகூ)

தோன்முதலுடைமைசால் தொகுத்தங்கோச்சுசெங்
கோன்முதலளித்தகோன் பேணுங்கொள்கையால்
வான்முதலவற்றெழும் வளர்சகோபவன்
கான்முதவினமெலாங் கரையில்வாழ்ந்ததே.

உரை.— யானைமுதற்பலவுடைமைகளை யிவர்க்குத்தந் தந்நாளிலந்திருந்தவரசன் றன்செங்கோலமுதலா யிவர்க்குத்தந்